# உதயன்

விலை ரூபா 6-00

13 சுடர்வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 22 திங்கட்கிழமை (06-07-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 188



பொது சன நூலகம்
08 JUL 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# அச்சுறுத்திப் பணம் பறிக்க முயலும் இயக்கங்கள் மீது கடும் நடவடிக்கை

## யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் மெண்டிஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

"யாழ். வர்த்தகர்களை மிரட்டி பணம், பொருள்களைப் பறிப்பதற்கும் வலோத்காரமாக நிதி திரட்டுவதற்கும் எந்த அரசியல் குழுவுக்கும் அல்லது கட்சிக்கும் இடமளிக்கப்படமாட்டாது. மிரட்டிப் பணம் பறிக்கும் இயக்கத்துக்கும் அதற்கு அஞ்சி நிதி செலுத்தும் வர்த்தகர்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்."

''நீதிமன்றம் மற்றும் பொலீஸாரின் வேலைகளைச் செய்ய முற்படும் இயக்கங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.''

யாழ். நகரத் தளபதியும் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்கான இணைப்பதிகாரியுமான பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் நேற்று உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். நகரில் வர்த்தகர்களை மிரட்டி நிதி அறவிடும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக வெளியான செய்திகள் தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''ஏதேனும் இயக்கம் அச்சுறுத்தி பணம் திரட்ட முயற்சித்தால்—அல்லது அதற்காக தமது அலுவலகத்துக்கு வரும்படி வர்த்தகர்களை வற்புறுத்தினால்—இதற்கு வர்த்தகர்கள் இடங்கொடுக்கக் கூடாது; உடன்படக்கூடாது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# செம்மணியில் மேலும் சடலங்கள் புதையுண்டுள்ளனவா? இல்லையா?

## கண்டறிய ஈ.பி.டி.பி. வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

செம்மணிப் பகுதியில் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் குறித்துகவனம்செலுத்தி அப்பகுதியில் சடலங்கள் உள்ளனவா? இல்லையா? என்பதை வெளிப்படுத்துங்கள்—இவ்வாறுவடமாகாணபடைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே. வி. ஜெகனே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

தாம் தளபதியுடன் இது தொடர்பாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாக ஜெகன் கூறினார் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் பகுதியில் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலால் யாழ். மாவட்டத்தில் காணாமற் போயுள்ளவர்களின் உறவினர்கள் கவலையடைந்துள்ளனர்.

தளபதிப் பதவியைத் தாங்கள் பொறுப்பேற்ற பின்னர் நல்லநிலையை உருவாக்கியுள்ளீர்கள்.

செம்மணிப் பகுதியில் சட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணியில் புதைகுழியா?

## மனித உரிமைக் குழுவுடன் இன்று ஆராயப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 6

கைதானவர்களில் நானூறுக்கு மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டு செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பாக வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தாருக்குழு ஒன்று தேசிய மனிதவுரிமைக் குழுவின் யாழ். கிளை அதிகாரிகளுடன் இன்று காலை 10.30 மணிக்கு பேச்சு நடத்த விருக்கின்றது.

இது தொடர்பாக அந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டியில் பரிதாபம்!

# தமது மூன்று பெண்பிள்ளைகளையும் கிணற்றில் தள்ளிக் கொன்ற தந்தை!

## தானும் தற்கொலை செய்ய முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 6

தமது வளர்ந்த மூன்று பெண்பிள்ளைகளையும் கிணற்றில் தள்ளிக் கொலை செய்து விட்டு தானும் கிருமிநாசனி குடித்து தற்கொலை செய்ய முயன்றார் ஒரு தந்தை.

மேற்கண்ட பரிதாபகரமான சம்பவம் அளவெட்டி வடக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வலது குறைந்த வாய்பேச முடியாத லோஜினி விஜயகுமார் (19 வயது), லிங்காதேவி (17 வயது), தயாளினி (15 வயது) ஆகியோரே இறந்தவர்களாவர்.

இவர்களின் தந்தையார் எஸ். விஜயகுமார் ஆபத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரண வெட்டு குறித்து அரசஅதிபர்களுடன்பேச்சு

கொழும்பு, ஜூலை 6

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தை வெட்டுவது தொடர்பாக வடபகுதி அரச அதிபர்களுடன் வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். கே. ஒபடகே தனித்தனியாகக் கலந்துரையாடினார்.

கடந்த வாரம் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம், வவுனியா. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த அரச அதிபர்களுடனேயே அவர் தனித்தனியாகக் கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்துக் கேட்டறிந்தார்.

நிவாரண விநியோகம் வெட்டப்படுவதால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக் குறித்து அவர் ஜனாதிபதியுடன் விரைவில் பேசவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தாண்டிக்குளத்தில்கண்ணி

கொழும்பு, ஜூலை 6

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி ஒன்று வெடித்ததனால் இரண்டு பெண்கள் காயம் அடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மேற்படி இரு பெண்களும் தமது வீட்டுக்குஅருகில் இருந்த குப்பைகளைத் தீயிட்ட போதே அப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாகக் கூறப்படுகின்றது. இரு பெண்களும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-9-21)

# நேற்று கரும்புலி தினம் அசம்பாவிதங்கள் இல்லை

## பாதுகாப்பு மட்டும் தீவிரம்

நேற்று கரும்புலி தினத்தை ஒட்டி, யாழ்ப்பாணம் உட்பட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று பெரும் தாக்குதல் சம்பவங்கள் ஏதும் இடம் பெற்றதாகத் தெரியவரவில்லை.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திலும் கிழக்கிலும் கரும்புலி தினம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஏற்பாட்டில் உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டதாகத் தெரியவந்தது. (உ)

# 6 இந்தியர் கைது!

கொழும்பு, ஜூலை 6

சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்தி வந்ததாகக் கூறப்படும் ஆறு இந்தியர்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

வளையல்கள், மாலைகள் உட்பட ஆறுலட்சத்து எண்ணாயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளை சுங்கத் திணைக்களம் பறிமுதல் செய்துள்ளது. – கைதான ஆறு பேரையும் இன்று நாடுகடத்துவதற்கான ஏற்பாடுகளை குடியகல்வு திணைக்களம் மேற் கொண்டுள்ளது. (உ-21)

## மோ. சைக்கிளிலிருந்து

# வீழ்ந்தவரின் மீது டிராக்டர் ஏறியது!

யாழ்ப்பாணம், ஜூலை 6

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின் சீற்றில் இருந்தவர் அதிலிருந்து விழுந்த போது அருகில் வந்த டிராக்டரின் முன்சில்லு அவரின் மீது ஏறியது. அவர் பின்னர் உயிரிழந்தார்.

சரசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மந்துவில் கிழக்கைச்சேர்ந்த கதிர்காமு சின்னத்துரை(வயது 54) என்பவரே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட ஒரு சில மணி நேரத்தில் அங்கு அவர் மரணமானதாக தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக நேற்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டத்துக்கு வடக்கில் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 6

கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் திருகோணமலையில் நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

சங்கத் தலைவர் ந. விஜயசுந்தரத்தினால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:—

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளின் நிலைமையை முதன் முதலில் அரசுக்கு வெளிப்படுத்திய பெருமை யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தையே சாரும். 19-11-1997 இல் எமது சங்கம் யாழ். கல்வித் திணைக்களத்தின் வலயம் I இல் ஆர்ப்பாட்டம் செய்தது. அப்போது ஈ. பி. டி. பியைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் எமது பிரச்சினைகளை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி ஆசிரியர் நியமனத்துக்கான ஏற்பாட்டைச் செய்வதாக உறுதியளித்தார். அவ்வுறுதியின் பிரகாரம் ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் 29-12-97 இல் ஜனாதிபதியைச் சந்தித்த குழு, வடக்கு, கிழக்கிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் நிலையை எடுத்துக் கூறியது. இதற்கமையவே ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வுண்மை நிலையை கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் மறந்து விடாது என நம்புகின்றோம்.

உண்மையில் இலங்கையில் வடபகுதியில் மட்டுமே 1994 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றும் நியமனம் கிடையாத பட்டதாரிகள் உள்ளனர். இந்த நிலை பெரும்பாலும் கிழக்குப் பகுதியிலும் இல்லை.

ஆனால் இப்போது கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் ஒரு விசித்திரமான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. நியமனத்தை விரைவுபடுத்து என்றகோரிக்கையுடன் நுழைந்த அச்சங்கம் இன்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்குமாறு கோரி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறது.

சுமார் 3500பேர் தோற்றிய இந்த நேர்முகப் பரீட்சையில் எல்லோருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்குவது என்பது உடனடிச் சாத்தியமற்றதொன்று. உண்மை நிலையைப் புரிந்துகொள்ளாமல் கோரிக்கைகளை முன்வைப்பது அவ்வளவு புத்திசாலித்தனமானதல்ல. 3500 பேர் ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பித்தமையால் போட்டிப் பரீட்சை நடத்த வேண்டும் என்ற வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கொள்கையை இரு சங்கங்களும் கூட்டாகச் சேர்ந்து எதிர்த்தோம். அப்போட்டிப் பரீட்சைக்கு மாற்றீடாக பட்டம் பெற்ற ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நியமனத்தை வழங்குமாறும் இரு சங்கத்தினரும் கேட்டுக் கொண்டோம். அதற்குக் கல்வி அமைச்சும் இணங்கிக் கொண்டது. அதற்கமைய நேர்முகப் பரீட்சையும் நடைபெற்றது. ஆனால் நியமனம் வழங்கும் பணி ஆமைவேகம் என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தகைய விரைவின்மைக்கு தமிழ் அதிகாரிகளின் அசமந்தப்போக்கும் காரணம். இதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் கல்வி அமைச்சின் செயலாளருடன் தொலைபேசியில் நாம் தொடர்பு கொண்டபோது பதினைந்து நாள் அவகாசம் தரும்படி அவர் எம்மிடம் கேட்டுக் கொண்டார். இக்கோரிக்கையை உண்ணாவிரதம் இருக்கும் பட்டதாரிகளிடமும் அவர் கேட்டுள்ளார். பதினைந்து நாள் அவகாசம் கொடுப்பதால் எதுவும் மூழ்கிப்போகாது.

இது விடயத்தில் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நரித் தந்திரத்தைக் கையாண்டனர். அத்தந்திரமே ''எல்லோருக்கும் நியமனம்'' என்பதாகும். 1994 ஆம் ஆண்டிலிருந்து நான்கு வருடங்களாக வேலையின்றியிருக்கும் பட்டதாரிகளுடன் 1997 ஆம் ஆண்டில் பட்டம் பெற்ற தம்மவர்களையும் (யாழ். பல்கலைக்கழக 97 ஆம் ஆண்டுப் பட்டம் நேர்முகப் பரீட்சை நடைபெற்றபோது வெளிவரவில்லை. எனவே ''97 என்ற'' எல்லோரும் சேர்ந்த பட்டியலில் வடபகுதியினர் இடம் பெற மாட்டார்கள்) சேர்த்துக்கொண்டு சாகும் வரை உண்ணாவிரதப் போரைத் தொடர்கிறார்கள்.

பட்டம்பெற்ற ஆண்டின் அடிப்படையில் நியமனம் வழங்குமாறு கேட்டுக் கொண்ட அச் சங்கத்தின் புதிய கோரிக்கை 94 ஆம் ஆண்டிலும் 97 ஆம் ஆண்டிலும் பட்டம் பெற்றவர்களின் கால வேறுபாட்டைச் சமப்படுத்தியதும் கள்ள நோக்கமேயன்றி வேறொன்றுமில்லை.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தைப் பொறுத்தவரை முதலில் ஆயிரம் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொண்டு பின் தொடர்ந்தும் சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதேயாகும். ஆனால் கிழக்குச் சங்கம் ஏதோ பரந்த நோக்கம், எல்லோரின் நலனிலும் அக்கறை கொண்டவர்கள் போல் காட்டிக்கொண்டு எல்லோருக்கும் ஆசிரியர் நியமனம் தா என்று கேட்பதாக நடித்துக்கொள்கிறது.

அவர்களின் கோரிக்கை புனிதமாக இருந்தால்; உண்ணாவிரதமிருக்கும் 110 பேருக்கும் உடன் நியமனம் தந்தால் உண்ணாவிரதத்தைக் கைவிடத் தயார் என கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவிடம் அச் சங்கத்தின் தலைவர் ஆதம்பாவா கேட்டிருப்பாரா? அப்படி 110 பேருக்கும் ஆசிரியர் நியமனம் கொடுத்திருந்தால், மிகுதி 890 பேருக்கும் நியமனம் கிடைக்காவிட்டாலும்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வேலையற்ற பட்டதாரிகள் விடயம்:

# உண்ணாவிரதப் போராட்டத்தை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை

கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மாகாணக் கல்வியமைச்சு அலுவலகம் முன்பாக மேற்கொண்டிருக்கும் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் இன்று விரிவுபடுத்தப்படவிருக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள், வர்த்தகர்கள் இன்று உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கு பற்றுகின்றனர்.

சாகும்வரையான உண்ணாவிரதத்தை மேற்கொள்ளும் மூன்று மாணவர்களில் ஒருவரான புஸ்பராஜா ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரின் பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும்—

பெரும்பாலும் இன்று அல்லது நாளை அவரின் பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும்—

சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அதேநேரம் — மாகாணக் கல்வி அமைச்சுச் செயலர் சு. டிவகலாலா கொழும்பு சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (மற்றொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

# ஆயிரம் பட்டதாரிகளுக்கு 10 நாள்களில் நியமனம்

## செயலர் டிவகலாலா அறிவிப்பு

திருகோணமலை, ஜூலை 6

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் திட்டத்திற்கமைய ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டதற்கமைய ஆயிரம் பட்டதாரிகளுக்கு பயிலுநர் பட்டதாரி ஆசிரியர் நியமனக் கடிதங்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

இக்கடிதங்களை வழங்குவதற்காக அமைச்சின் அதிகாரிகள் இரவு பகலாக கடமை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

''கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

''வேலையற்றிருக்கும் சகல பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற அவர்களது பிரதான கோரிக்கை தொடர்பாக ஏற்ற தீர்மானங்களை எடுத்து ஜனாதிபதிக்கு அறிவித்து நியமனங்களை இன்னும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

''வடக்கு-கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் மற்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஆகியோரை உள்ளடக்கிய கூட்டம் ஒன்றை துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தலைமையில் கூட்டி இது தொடர்பாக ஆராய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன''—என்றும் அவர் தெரிவித்தார்.

''வடக்கு — கிழக்கு மாகாணத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனத்தை வழங்குவதில் எனது அமைச்சு தாமதம் காட்டியதாக என் மீது குற்றம் சுமத்தி, இதற்கான முழு பொறுப்பையும் நானே ஏற்க வேண்டும் என சில தொழிற் சங்கங்களும், அக்கறையுள்ள சக்திகளும் செய்து வரும் பிரசாரத்தை வன்மையாக மறுக்கிறேன்'' — என்றும் அவர் தெரிவித்தார்.

''கல்வியமைச்சின் செயலாளர் என்ற வகையில் நேர்முகப் பரீட்சையை நடத்தி, நேர்முகப் பரீட்சையில் எத்தனைபேர் நியமனத்துக்காக தகுதி பெற்றுள்ளனர் என்ற பட்டியலை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிப்பேன். அதற்கு அங்கீகாரம் கிடைத்த பின்னர் அவர்களுக்கான பாடசாலைகளை ஒதுக்குவதே என் பொறுப்பாகும் இதைவிடுத்து இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அறிந்து கொள்ளாது — மாகாண நிர்வாகத்தின் அதிகாரம் என்ன என்பதை அறிந்து கொள்ளாது—அறிக்கைகள் விடுவது பொருத்தமற்றது'' — எனவும் அவர் தெரிவித்தார்.

(உ-9)

# தீர்வு காணப்படாவிட்டால் ஆளுநர் தன்னுடைய பதவியைத் துறப்பாராம்

சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு, கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்குஉடனடித்தீர்வு காண ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும்–தீர்வு கிடைக்காவிடின் தனது ஆளுநர் பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளதாகவும் – வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா தன்னோடு தொலைபேசி மூலம் உரையாடிய போது தெரிவித்ததாக வடக்கு- கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ஆதம் பாவா தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகுறித்துஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டிக்கு பக்ஸ் செய்தியனுப்பியுள்ளதாகவும்– இது குறித்து சம்பந்தப்பட்ட சகலருடனும் பேச்சுவார்த்தைநடத்தி உண்ணாவிரதத்தை முடிவுக் [illegible] பூண்டிருப்பதாகவும்–காமினி பொன்சேகா மேலும் கூறியுள்ளதாக ஆதம்பாவா தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியைத் தலையிட மட்டு. எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 6

''கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ள சாகும் வரையான உண்ணாவிரத விவகாரத்தில் தலையிட்டு அவர்களுக்குச் சாதகமான பதிலை வழங்க வேண்டும்'' என்று மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அவர் அனுப்பிய அவசர பக்ஸ் செய்தியிலேயே இப்படிக் கோரியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்கிலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கடந்த 30 ஆம் திகதி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை கடந்த ஒரு வருடமாக நீடிக்கிறது. இவர்களது பிரச்சினைக்கு ஜூன் மாதத்துக்கு முன்னர் தீர்வு காண்பதாக மாகாணக் கல்வி அமைச்சுச் செயலர் உறுதி கூறியிருந்தார். ஆனால் அந்த உறுதிமொழி நிறைவேறாத காரணத்தால் அவர்கள் உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தீர்வு காணப்படாததால், தாங்கள் இவ்விடயத்தில் தலையிட்டு உண்ணாவிரதிகளுக்கு சாதகமான பதிலை வழங்க வேண்டும் என்று கோருகிறேன்.

உண்ணாவிரதத்தை மேற்கொண்ட பட்டதாரிகளில் ஒருவர் மோசமாகப்பாதிக்கப்பட்டு அபாய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட பட்டதாரி மட்டக்களப்பைச் சேர்ந்தவர். அந்தத் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துபவர் என்ற கோதாவில் அவர்கள் பிரச்சினையில் தலையிடுமாறு கோருகின்றேன்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு தேவையான பணிப்புரைகளை விடுத்து, உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவ வேண்டும் — இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜென்ரீனா, ஜேர்மனி, இத்தாலி எதிர்பாராத தோல்வி!

# அரையிறுதிக்கு பிறேசில், பிரான்ஸ், நெதர்லாந்து, குறோஷியா!!

பாரிஸ், ஜூலை 6

பிரான்ஸில் நடைபெற்று வரும் 16 ஆவது உலகக்



கிண்ண உதை பந்தாட்டப் போட்டித் தொடரில் முன்னாள் உலக சம்பியன்களான ஆர்ஜென்ரீனா, ஜேர்மனி, இத்தாலி ஆகிய அணிகள் எதிர்பாராத விதமாக அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்து விட்டன.

தற்போதைய உலக சம்பியனான பிறேசில், போட்டிகளை நடத்திவரும்பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் முதல் முறையாகப் போட்டியில் பங்குபற்றிய குறோஷியா ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இந்தப் போட்டித் தொடரின் கால் இறுதி ஆட்டங்கள் கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலாவது ஆட்டத்தில் பிரான்ஸ் அணி இத்தாலி அணியை 4-3 என்ற கோல் கணக்கில் வென்றது.

அன்று நடந்த இரண்டாவது ஆட்டத்தில் பிறேசில் அணி டென்மார்க் அணியை 2 — 1 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

சனிக்கிழமை நடந்த போட்டியில் முதல் ஆட்டத்தில் ஜேர்மனியை குறோஷியா தோற்கடித்தது. குறோஷியர்கள் மூன்று கோல்களைப் போட்டனர். ஆனால் ஜேர்மனியர் ஒரு கோல் கூட போடவில்லை.

அன்று நடந்த இரண்டாவது ஆட்டத்தில் எதிர்பாராத விதமாக ஆர்ஜென்ரீனா அணி 2 — 1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அணியிடம் மண் கவ்வியது.

அரையிறுதி ஆட்டங்கள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா, இத்தாலி, ஜேர்மனி ஆகிய அணிகள் சந்தித்த தோல்வி உலக உதை பந்தாட்ட ரசிகர்களின் கணிப்புகளை மாற்றியமைத்துவிட்டன.

முன்னாள் உலக சம்பியனான ஆர்ஜென்ரீனா கால் இறுதிக்கு முந்திய ஆட்டங்களில் தோல்வி எதனையும் சந்திக்கவில்லை. 11 தடவைகள் உலகக்கிண்ண ஆட்டங்களில் பங்குபற்றிய ஆர்ஜென்ரீனா 1978, 1986 ஆம் ஆண்டுகளில் நடந்த போட்டிகளில் வென்று உலக சம்பியனாக வந்தது குறிப்பிடத்தக்கது.

மூன்று முறை உலகக் கிண்ணத்தை வென்ற இத்தாலி அணி அரையிறுதிக்கு தகுதி பெறாதது ரசிகர்களால் எதிர்பார்க்கப்படாத ஒன்றே ஆகும். உலகில் மிகப் பலம் வாய்ந்த அணியாகத் திகழ்ந்த இத்தாலி அண்மைக்காலமாக ஆட்டம் கண்டு வந்தது.

உதை பந்தாட்டத்தை கடவுளாக நினைக்கும் இத்தாலியர்களுக்கு இந்த தோல்வி பலத்த அடியாகவே உள்ளது.

கால் இறுதியில் தோல்வியடைந்து வெளியேறிய அடுத்தஅணியான ஜேர்மனி முன்னைய ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி வந்தது. 14 தடவைகள் உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றி மூன்று முறை உலகக் கிண்ணத்தை வென்று ஜேர்மனி சாதனைபடைத்தது. உலகத்தரக் கணிப்பின்படி பிறேசிலுக்கு அடுத்தபடியாக ஜேர்மனியே இருந்து வந்தது.

(ஐ-6-ரீ)

## குறோஷிய அணியின் அபார சாதனை!

பாரிஸ், ஜூலை 6

உலகக் கிண்ணப் போட்டியில் முதன் முறையாகப் பங்குபற்றிய குறோஷிய நாட்டு அணி எடுத்த எடுப்பிலேயே கால் இறுதியாட்டத்தில் வென்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்று சாதனை படைத்துள்ளது.

உலக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் ''எச்'' பிரிவில் விளையாடிய குறோஷிய அணி முதற் சுற்றில் இரண்டு ஆட்டங்களில் வெற்றியீட்டியது. ஓர் ஆட்டத்தில் தோல்வி கண்டது.

3 - 1 என்ற கோல் கணக்கில் ஜமேய்க்காவையும், 1 – 0 என்ற கோல் கணக்கில் ஜப்பானையும் குறோஷிய அணி தோற்கடித்தது. ஆர்ஜென்ரீனா அணியிடம் 1–0 என்ற கோல்கணக்கில் தோல்விகண்டது.

இரண்டாவது சுற்றில் பலத்த போட்டிக்கு மத்தியில் றுமேனிய அணியை 1 – 0 என்ற கோல் கணக்கில் குறோஷிய அணி வென்றது.

கால் இறுதிப் போட்டியிலும் சளைக்காது விளையாடிய இந்த அணி நேற்று முன்தினம் நடந்த முதலாவது கால் இறுதி ஆட்டத்தில் எதிர்பாராத விதமாக முன்னாள் உலக சம்பியனான ஜேர்மன் அணியை 3 - 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

அரையிறுதி ஆட்டத்திலும் இந்த அணி அபார சாதனை படைத்து விடுமோ என உதை பந்து உலகம் எதிர்பார்த்தபடி உள்ளது. (ஐ-6)



கால் இறுதி ஆட்டத்தில் நெதர்லாந்து அணியிடம் மண்கவ்விய முன்னாள் சம்பியனான ஆர்ஜென்ரீனா அணியின் முன்னணி கப்ரியல் படிஸ்டுடா அண்மையில் செயின்ற் என்ரனியின் கில்லேர்ட் ஸ்ரேடியத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம். (படம்: ஏ, எவ்.பி)

## பிறேசில்- நெதர்லாந்து; பிரான்ஸ்-குறோஷியா!

### அரையிறுதியில் மோதல்!!

பாரிஸ், ஜூலை 6

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் இலங்கை நேரப்படி இரவு 1. 30 மணிக்கு ஆரம்பமாகும். மோதவுள்ள அணிகள் வருமாறு:-

★ நாளை—பிறேசில் எதிர் நெதர்லாந்து.

★ புதன்— பிரான்ஸ் எதிர் குறோஷியா.

அரையிறுதியில் வெற்றிபெறும் இரு அணிகளும் 12 ஆம் திகதி நடைபெறும் இறுதி ஆட்டத்தில் பங்குபற்றும். அதற்கு முதல் நாள் மூன்றாவது இடத்தை தெரிவு செய்வதற்கான ஆட்டம் நடைபெறும். (ஐ-6-ரீ)

### சிங்கப்பூரில்

## உதைபந்தாட்டப் போட்டி விமானத்தில் ஒளிபரப்பு

சிங்கப்பூர், ஜூலை 6

விமானத்தில் பறந்தவாறே உதைபந்தாட்டப் போட்டித் தொடரைக் கண்டு களிக்க சிங்கப்பூர் 'எயர் லைன்ஸ்' விமான நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

சிங்கப்பூர் மக்கள் உதைபந்தாட்டப் போட்டிகளில் மிகுந்த ஆர்வமுடையவர்கள்.

பிரான்ஸில் நடைபெறும் போட்டிகள் நேரடியாக விமானங்களில் ஒளிபரப்பப்படுகின்றன.

இரண்டு அரையிறுதி ஆட்டங்களும், 3 ஆம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டியும் விமானங்களில் விசேடமாக ஒளிபரப்பாகும் என சிங்கப்பூர் எயர்லைன்ஸின் விற்பனை முகாமையாளர் தெரிவித்தார். (ஐ)

## 'சார்க்' மாநாடு நடைபெறும் போது ஐ.நா. செயலர் கொழும்பு வருவாரா?

புதுடில்லி, ஜூலை 6

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) உச்சி மாநாடு இம் மாத இறுதியில் கொழும்பில் நடைபெறும் வேளையில் ஐ.நா. செயலாளர் நாயகம்

### உலக அரங்கில்

கோபி அனான் கொழும்பில் தங்கியிருப்பாரா?

இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தியாவில் வெளியாகும் 'புரொன்ரியர் போஸ்ட்' என்ற பத்திரிகை இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

தென்னாசியாவில் எழுந்துள்ள பதற்ற நிலையைத் தணிப்பதில் தமக்குள்ள அக்சறையை வெளிப்படுத்து முகமாக ஐ.நா. செயலாளர் மாநாடு நடைபெறும்போது கொழும்பில் தங்கியிருப்பார் என்று அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்ளும் சமயத்தில் பாகிஸ்தான் — இந்திய பிரதமர்களிடையே இடம் பெறவுள்ளசந்திப்பில் ஐ.நா. செயலாளர் நாயகமும் கலந்து கொள்வதற்கான சாத்தியக்கூற்றை இராஜதந்திர வட்டாரங்கள் நிராகரித்து விட்டன என்றும்அப் [illegible] ரின் கொழும்பு விஜயம் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சும், இலங்கை வெளிவிவகார அமைச்சும் தெரிவித்துள்ளன. (ஐ)



வெள்ளை வங்காள இனப் புலி ஒன்று — இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளது.

உலகில் மிக அரிதாகக் காணப்படும் இந்த வெள்ளைப் புலி ஆர்ஜென்ரீனாவின் புவனேர்ஸ்அயர்ஸ் நகர மிருகக்காட்சிச் சாலையில் தனது குட்டிகளை முகர்ந்தவாறு காணப்படுகிறது. (படம்:ஏ.எவ்.பி.) (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

விதை நெல் விற்பனைக்குண்டு. 500-1, H-4, 34-6 இன விதை நெல் உண்டு. தொடர்பு: செ.செல்வராணி (விதானையார் வீடு), புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய். (சி/4196]

### யாழ்ப்பாணம

4-7-98 வானொலியில் ஒரு முழுவட்டம் நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய ஆாலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் மனிதர்களே இல்லாத யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கதை 50/-. [57371]

### கலர் மீனகள

பல இன கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. ஐ. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை. (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன் ஒழுங்கை) பார்வையிடும் நேரம், நண்பகல் 12 மணிக்குப் பின். [57353]


# யாழ். பல்கலைக்கழக ஊழியருக்கு கஷ்ட நிவாரணம் வழங்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் உள்ளிட்ட சகல பணியாளர்களுக்கும் 1996 ஆம் ஆண்டின் ஆறு மாத காலப் பகுதிக்குரிய கஷ்ட நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களுக்கு இதுவரை கஷ்ட நிவாரணம் வழங்கப் படாததை ஆட்சேபித்து கடந்த 23 ஆம் திகதி பல்கலைக்கழக ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஊழியர்களுக்கான கஷ்ட நிவாரணத்தை வழங்குவது என ஜூன் 27 ஆம் திகதி நடைபெற்ற பேரவை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேரவைத் தீர்மானம் காலந் தாழ்த்தியதாயினும் மிகவும் சரியானதும் சமயோசிதமானதுமென யாழ். பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தற்போது கஷ்ட நிவாரணம் வழங்க நிர்வாகம் ஒத்துக் கொண்டுள்ளதால் 97 ஆம், 98 ஆம் ஆண்டுக்குரிய கொடுப்பனவையும், போரினால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உரிய நடவடிக்கை எடுக்குமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதென்றும்—

கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தத்திற்கு தமது தார்மீக ஆதரவை நல்கிய சகல சமூக நலன் விரும்பிகளுக்கும் நன்றி கூறுகின்றோம் என்றும்—

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கமும், பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியமும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# பாவனைக்கு உதவாத பொருள்கள் அழிப்பு

நெல்லியடி, ஜூலை 6

வடமராட்சிப் பகுதியிலுள்ள நெல்லியடி, மந்திகை, புலோலி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுமுள்ள விற்பனை நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த பாவனைக் காலம்காலா வதியான பலபொருள்கள்கடந்த வெள்ளியன்று சுகாதார பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டு, முற்றாக அழிக்கப்பட்டன.

யாழ். பிராந்திய உணவு மருந்துப் பரிசோதகர் எம்.மகாதேவன் தலைமையில், யாழ். பிராந்திய பிரதி சுகாதாரப் பரிசோதகர் எஸ். இராஜேந்திரா, தொழுநோய் பரிசோதகர் கே. சிவபாலன். பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். இராசேந்திரம், புலோலி சுகாதார பரிசோதகர் எஸ். செல்வரட்ணம் ஆகியோருடன் 44 பொது சுகாதார பயிலுநர்களும் இத்திடீர்ப் பரிசோதனைகளை காலை முதல் பிற்பகல் வரை நடத்தினர்.

பிஸ்கட்டுக்கள், ரொபிகள், கச்சான் அலுவா, கோப்பித்தூள், எசன்ஸ்வகைகள், ரின்பால், ரின்மீன், குழுக்கோஸ் போன்றவைகளுடன், தனியார் டிஸ்பென்சரிகளில் மருந்து வகைகளும் கண்டுபிடிக்கப்பட்டு அவை முற்றாக அழிக்கப்பட்டன.

கடந்த வாரமும், புலோலியிலும், பருத்தித்துறையிலும் மூன்று வர்த்தக நிலையங்களில். காலாவதியான பிஸ்கட் வகைகள் சுகாதார பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-109-173-135)

# நிவாரணத்திற்கு தரங்குறைந்த அரிசி

வடமராட்சி, ஜூலை 6

பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்துக்கு தரங்குறைந்த அரிசி வழங்கப்படுகிறது.

இப் பகுதியில் நிவாரணப் பொருள்களை விநியோகித்து வரும் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிவாரணத்துக்கென வழங்கி வரும் அரிசி, பல பொருள்கள் கலந்து தரங்குறைந்து காணப்படுகிறது.

தரமற்ற அரிசி குறித்து நிவாரணம் பெறுவோர் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-173)

# நூலகத் திறப்புவிழா

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நூலகத் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் தலைவர் ச. கைலாசநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு யாழ். செயலக பிரதி திட்டப் பணிப்பாளர் நா. பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும், சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரி ஆ. வ. கணேசலிங்கம், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன யாழ். திட்ட இணைப்பாளர் திருமதி பொன்மலர்–இராஜேஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ 30)

# மருதங்கேணியில் தையற் பயிற்சி நிலையம்

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையும், கிராம அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் அமைத்த மகளிருக்கான தையற் பயிற்சி நிலையம் ஒன்று கடந்த வெள்ளி திறந்துவைக்கப்பட்டது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் ஆர். சிவரட்ணம், உதவி அரச அதிபர் வி. ப. வேலாயுதபிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இப் பயிற்சி நிலையத்தை மருதங்கேணி உதவி அரச அதிபர் வி. ப. வேலாயுதபிள்ளை திறந்து வைத்தார். (இ-36-9)

# வீதி திருத்தம்

வடமராட்சி, ஜூலை 6

பருத்தித்துறை கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து வல்லிபுரம் செல்லும் வீதி திருத்தப்பட்டு வருகிறது.

சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படாதிருந்த இவ் வீதி மிக மோசமாகச் சேதமடைந்து இருந்தது. (ஐ-173)


அதிகரிக்கப்பட்ட எமது புதிய

## வட்டி வீதங்கள்

01 - 07 1998 இலிருந்து எமது வட்டி வீதங்கள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளன.

1. நிலையான வைப்புக்கள்
   (i) வருட வட்டி 11%
   (ii) மாத வட்டி 10.5%
2. சாதாரண சேமிப்புக் கணக்கு 10.5%

மதிநுட்பமான சேமிப்புக்கு

## ரிதிரேகா

நாளை நலமுற இன்றே சேமியுங்கள்

## தேசிய சேமிப்பு வங்கி

(சி/4185)


# சுவாமி தந்திரதேவா யாழ். வருகிறார்

கொழும்புத்துறை, ஜூலை 6

கடந்த 17 ஆண்டுகளாக திருமலையில் ஆச்சிரமம் அமைத்து சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்கத் துறவி சுவாமி தந்திரதேவா எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

இரு வாரங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர் யாழ். மாவட்டத்தில் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஏற்பாடு செய்யப்படவுள்ள 70 சமய நிகழ்வுகளில் கலந்து கொள்வார்.

யாழ். இந்துசமயப் பேரவையும், ஏனைய சமய நிறுவனங்களும் இணைந்து இந் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளன. (ஐ-30)

# உடற்கல்விப் போட்டி

தென்மராட்சி, ஜூலை 6

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்கல்விப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசன் தலைமையில் நடைபெறும். (ஐ-117)

# சிரமதானம்

கொழும்புத்துறை, ஜூலை 6

கொக்குவில் – நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அண்மையில் கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தினர் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (ஐ-30)

# சிறுவர் ஆய்வுப்பட்டறை

செம்பியன்பற்று, ஜூலை 6

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரால் எதிர் வரும் புதன்கிழமை காலை 8.00 மணியில் இருந்து பிற்பகல் 4.00 மணி வரை சிறுவர்கள் சார்பான ஆய்வுப் பட்டறை ஒன்று நடைபெற உள்ளது.

இந்த ஆய்வுப்பட்டறைக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையினர், மருதங்கேணிகல்விக்கோட்ட அதிபர்கள், சமூக அபிவிருத்தி அமைப்பு தலைவர்கள் உட்பட மொத்தம் 50 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-36)

# உளவியல் நூல் வெளியீடு

வைத்தியக் கலாநிதி சே. சிவசண்முகராஜாவின் '' உள நெருக்கீடுகளும்மன நலனும்' என்ற நூல் அறிமுக விழா, எதிர் வரும் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்தந்தை சூ. டேமியன், பேராசிரியர் சு. பவானி, வைத்திய கலாநிதி இந்திரா சத்தியநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

நூல் அறிமுக உரையை உள மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் க. குணராசா வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் ஆ. குணரத்தினம் முதற்பிரதியைப் பெறுவார்.

அரசறிவியல் —சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி நா. சண்முகலிங்கன், ஆசிரிய கலாசாலை உளவியற்றுறை அதிதி விரிவுரையாளர் இ. இரவீந்திரநாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்

ஏற்புரையை கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை வழங்குவார். (ஐ)


உ
சிவமயம்

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருஷம் ஆனித்திங்கள் 22 ஆம் நாள் (6 - 7 – 1998) திங்கட்கிழமை முற்பகல் 10.52 மணிமுதல் 11.22 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்,

190A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மைதிலி ஜுவல்லறியின்

கிளை ஸ்தாபனமான எம்மால் புதிதாகத் திறக்கப்படவுள்ள

## ★ மதனா ஜுவல்லறி ★

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து தங்களை மகிழ்விக்க இருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
மதனா ஜுவல்லறி ஸ்தாபனத்தார்

177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(57372)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப சுகாதார நிலையங்களை செஞ்சிலுவை சங்கம் மறுசீரமைக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 6
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை ஆரம்ப சுகாகார நிலையங்களை மறு சீரமைத்து வருகின்றது.

போர் அனர்த்தங்களினால் முற்றாகச் செயலிழந்திருந்த இந்த நிலையங்களில் ஆறு நிலையங்கள் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்குப் பொறுப்பாக 6 ஆரம்ப சுகாதார அமைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வாதரவத்தை, கோப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, மருதங்கேணி, தொண்டமனாறும் கம்பர்மலையும் சேர்ந்த பகுதி ஆகிய 6 இடங்களிலேயே இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் இருந்து மிகத் தூரத்தில் இருக்கும் மக்களது சுகாதாரப் பிரச்சினைகளை மேம்படுத்துவதற்கும் முதல் உதவிகளைச் செய்வதற்கும் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் பயன்படும் என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் வி. கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

வைத்திய கலாநிதி வி. தியாகராசாவின் வழி காட்டலின் கீழ் செயற்பட்டுவரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் மக்களிடம் சுகாதாரவிழிப்புணர்வைஏற்படுத்துவதற்கான கருத்தரங்குகளையும் கூட்டங்களையும் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ-5-6-15)

## குடும்பஸ்தர் தற்கொலை

தென்மராட்சி, ஜூலை 6
விசாரணைக்கென முகாம் செல்வதாக வீட்டில் கூறிவிட்டுச் சென்ற இளம் குடும்பஸ்தர் வேப்ப மரம் ஒன்றில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பளை முகாவிலில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மூத்ததம்பி தங்கவேலு (வயது 42) என்பவரே மரணமானவராவார்.

அடிக்கடி விசாரணைக்கு அழைக்கப்பட்டதால் வேலைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டு வீட்டில் பொருளாதாரக் கஷ்டங்கள் உருவானதால் விரக்தி ஏற்பட்ட நிலையில் இவர் தற்கொலை செய்திருக்கலாமென மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி மு. குமாரவேலு விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

(ஐ-117)

## கால்நடை வளர்ப்போர் கூ. சங்கங்கள் புனரமைப்பு

அரியாலை, ஜூலை 6
யாழ். மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை மீளவும் புனரமைத்து செயற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஒன்பது கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் சில இயங்காமல் உள்ளன.

இவற்றை மீளவும் புனரமைத்து இயங்க வைப்பதற்கு கூட்டுறவுத் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

(ஐ-17)

## குருநகர்ப் பகுதியில் நுளம்பு பெருக்கம்

குருநகர், ஜூலை 6
குருநகர், றெக்கிளமேசன் பகுதியில்உள்ள கழிவு வாய்க்கால்கள் சரியாக சுத்தம் செய்யப்படாததன் காரணமாக இப்பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதாக இப்பகுதிப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதான வீதியின்முன்பாக உள்ள கழிவு வாய்க்கால்கள் மட்டுமே சுத்திகரிக்கப்பட்டுள்ளன. ஒழுங்கைகள் மற்றும் உள் வீதிகளில் உள்ள வடிகால்கள் சுத்திகரிக்கப்படாததனால் வடிகால்களில் மண்தேங்கி நின்று தண்ணீர் ஓட்டத்தைத்தடை செய்துள்ளது. இதனால் தற்போது இங்கு நுள்ம்புகள் பெருகி உள்ளதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

(ஐ-51)

## விஞ்ஞானக் கண்காட்சி

மானிப்பாய், ஜூலை 6
சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் விஞ்ஞானக் கண்காட்சி எதிர்வரும் 9ஆம், 10 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3மணி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி றெ. இருதயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் கல்விவலயம் 2இன் கல்விப்பணிப்பாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இக் கண்காட்சியில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், சுகாதாரம், விவசாயம் போன்ற பிரிவுகளும், நவீன தொழில்நுட்பப் பிரிவுகளும் உள்ளடக்கப்படவுள்ளன.

(ஐ-90)

## வடமராட்சி

## கருகம்பன் மயானத்தைப் புனரமைக்க கோரிக்கை

செம்பியன்பற்று, ஜூலை 6
வடமராட்சிப் பகுதியில் உள்ள கருகம்பன் மயானத்தைப் புனரமைப்புச் செய்யுமாறு ஈ.பி.டி.பி வடமராட்சி அமைப்பாளர் ஊடாக புலோலி பிரதேச சபை செயலருக்கு மந்திகை அபிவிருத்திக்குழு சார்பில் 12 அபிவிருத்தி அமைப்புக்கள் கூட்டாக மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளன.

கருகம்பன் மயானம் யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள தெருமூடி மடத்தடியில் இருந்து தெற்குப்பக்கமாக 300 யார் தூரத்தில் அமைந்துள்ளது. நீண்ட காலமாகக் கைவிடப்பட்ட நிலையில் உள்ள இந்த மயானம் எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

(ஐ-36)


## YOGI HOME SCIENCE ACADEMY

### புதிய வகுப்புகள் 10 - 07 - 98 முதல் ஆரம்பம்

1) இலகுவழித் தையல் ( Cutting Classes )
2) கேக் ஐசிங் ( Birthday Cakes and Wedding Structures )
3) மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் ( Fondant Icing and Sugar Craft )
4) நவீன சமையல் முறைகள்
5) பூக்கள் தயாரித்தலும், அலங்கரித்தலும்.
6) துணியில் வர்ண அலங்கரிப்பு 7 வகுப்புகள் மட்டும் ( Modern Fabric Paintings)

விசேட பயிற்சி நெறிகள்:
Basic Make - Up and Hair Dressing
[ அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரங்களும் ]

இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள், சகல வைபவங்களுக்குமான முக ஒப்பனைகள், நவீன புதிய தலை அலங்காரங்கள், இந்திய, சிங்கள, குஜராத்தி மடிசார் போன்ற வித்தியாசமாக சாறி அணியும் முறைகள், இந்த பயிற்சி நெறி 15 வகுப்புகள் மட்டும். முடிவில் செயல்முறை பரீட்சைகள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட், ( நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக )
யாழ்ப்பாணம்.

(57355)



## கைவண்ணம் வளர்க!

கோல அழகினில் இறை
கோயில் வீதி வலம் வர
ஞாலம் புகழ் வாகனங்கள்
நாளும் செய்து புகழ் பெற்ற
நா. மகேந்திரன் கைவண்ணம் வளர்க!

இந்திர கலாலயத்தின் கன்னிப்படைப்பாய்
இலட்சணங்கள் ஒருங்கே அமைந்த
பண்பாட்டுப் பெருமைப் பெட்டகமாய்
வீரபத்திரர் பவனி வர
வணங்கும் தேரமைத்த
பண்பாட்டுச் செம்மல்
மகேந்திரன் புகழ் வாழி!

வாழ்த்துபவர்கள்: சித்தப்பாமார்
''சிவங்கரீ கலையகம்''

பாலா மரத்தொழிலகம்
தெல்லிப்பழை

இன்று திங்கட்கிழமை 06-07-98
உடுப்பிட்டியூர்
சந்திரசேகர சுவாமி கோயிலில்
நடைபெறும் தேர் வெள்ளோட்டத்தை ஒட்டி இந்த வாழ்த்து வெளியிடப்பட்டது.

(57347)


## கேள்வி அறிவித்தல்

### கல்வித் திணைக்களம் வலயம் 01
யாழ்ப்பாணம்

*யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் வரும் பாடசாலைகட்கு டி எஸ். டி. திட்டத்தின் கீழ் பாடசாலைத் தளபாட விநியோகம் - 1998*

யாழ். கல்வித் திணைக்களத்தின் கீழ்வரும் பாடசாலைகட்கு டி. எஸ். டி. திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட பாடசாலைத் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் தளபாட உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்களிடமிருந்து 1998 - 07 - 27 ஆம் திகதி பி. ப. 2-00 மணி வரை யாழ். கல்வித் திணைக்கள வலயம் 01 இன் கேள்விச் சபையின் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விகள் இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப் பிரதியைத் தனியாக ஒரு தபாலுறையில் இட்டு அதில் மூலப் பிரதி என்று குறிப்பிட்டும், இணைப் பிரதியை இன்னொரு உறையிலிட்டு அவ்வுறையில் இணைப்பிரதி என்று குறிப்பிட்டும், பின் இவ்விரண்டு உறைகளையும் ஒரு தபால் உறையில் இட்டு அரக்கு முத்திரையிட்டு கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் கேள்வி முடிவு நேரத்திற்கு முன்பு இடப்படல் வேண்டும். அல்லது குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் ''டி. எஸ். டி. திட்டத்தின் கீழ் பாடசாலைகட்குத் தளபாட விநியோகம் - 1998 கேள்விப் பத்திரம்'' என்பது குறிப்பிடப்படல் வேண்டும். 1998 - 07 - 27 ஆம் திகதி அன்று கேள்வி முடிவு நேரத்தின் பின் 2-15 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகம் அளிக்கலாம்.

03. கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றைக் கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 250 தினையும், மீளளிப்புப் பணமாக ரூபா 25,000 மும் ஆக மொத்தம் ரூபா 25, 250 இனைச் செலுத்தி, உரிய பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து 1998 - 07 - 22 ஆம் திகதி அன்று காலை 11-00 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். வங்கிக் கட்டளை கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு பெறப்படல் வேண்டும்.

04. தேவையான தளபாடங்கள்:

01. மாணவர் உருக்கு மேசை 'ஏ'
02. மாணவர் உருக்கு கதிரை 'ஏ'
03. மாணவர் உருக்கு மேசை 'பி'
04. மாணவர் உருக்கு கதிரை 'பி'

நா. சுந்தரலிங்கம்
கல்விப் பணிப்பாளர்,
வலயம் 01,
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
வலயம் 01,
யாழ்ப்பாணம்.
1998 – 07 – 03

(சி-4186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி, மே. ப. நோ. கூ. சங்கம்

கைதடி

லொறி இயந்திரம் திருத்துவதற்கான

## கேள்விப் பத்திரம் 26/5296

எமது சங்க லொறி எஞ்சின் வேலை செய்வதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

விவரம்:-

1. பிஸ்ரன், றிங்ஸ், சிலிவ் (ஜப்பான்) முழுவதும் மாற்ற.
2. காஸ் கெற் ( ஜப்பான் ).
3. பிரதான பியரிங்ஸ் (ஜப்பான்).
4. எஞ்சின்பில்டர், டீசல் பில்டர், எஞ்சின்மௌன்ட்.
5. வாட்டர்பம், றிப்பயர், கிற் (ஜப்பான்).
6. கோஸ்பைப், கோஸ் கிளிப், பான்பெல்ட் மாற்ற.

மேற்படி பொருள்களுடன் கூலியுட்பட விவரங்களுக்கு தலைமைக்காரியாலயத்தில் வந்து அறியவும்.

நாவற்குழி கிளைக் கட்டடம் திருத்துதல்

1. பிளாற் கொங்கிறீற் கொத்தி சிமெந்து கலவையினால் பூசுதல்.
2. மரக்கதவை கழற்றி பழுதான பாகங்களை நீக்கி புதுப்பித்தல்.
3. இரும்புக் கதவின் பழுதான கம்பி சட்டங்களை மாற்றி அமைத்தல்.

தபாற்கட்டடம் ( கைதடிச் சந்தி )

1. நிலம் கொத்தி பூசுதல்.
2. சுவர் உடைவு திருத்துதல்.
3. தீந்தை அடித்தல்.

முடிவு திகதி: 14 - 07 - 98

[சி/4193]

---

கட்டைவேலி நெல்லியடில்

## ப. நோ. கூ. சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் கீழே குறிப்பிடப்படும் விவரப்படி வெற்றுச் சாக்குகள், உரப்பை கள், வெற்றுப் பெரல்கள் விற்பனைக்கு கூறு விலை கோரப்படுகின்றது.

விண்ணப்பிப்போர் 'தலைவர் / பொது முகாமையாளர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி.' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கேள்வி நிறைவு நாள் 14 07 1998

விவரம்

| | | |
|---|---|---|
| 01- | 50 கிலோ சாக்கு | 1,750 |
| 02. | 68 கிலோ சாக்கு | 132 |
| 03. | நவதானியம் | 63 |
| 04. | உரப்பை மா | 25,159 |
| 05. | சீனி உரப்பை | 20,101 |
| 06. | வெற்றுப்பெரல் | 41 |
| 07. | கழிவு சாக்கு | 662 |

- பொது முகாமையாளர்.

01-07-1998. (சி-4170)

---

# திருடர் கோஷ்டி சிக்கியது

அரியாலை, ஜூலை 6

ஈச்சமோட்டை, சுண்டுக்குளி, கொய்யாத்தோட்டம் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் கையும் மெய்யுமாகச் சிக்கினார்.

நள்ளிரவு வேளையில் ஈச்சமோட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் களவாடப் புகுந்த சமயமே ஒருவர் வீட்டுக்காரரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

தப்பிச் சென்றோரில் மூவர் பின்னர் சென். பற்றிக்ஸ் வீதிப்பகுதியில் பிடிபட்டுள்ளனர். கோழிகள், வீட்டு உடைமைகள் ஆள்கள் இல்லாத வீடுகளில் உள்ள உடைமைகளைத் திருடுவது போன்ற சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததை இவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பொதுமக்களிடம் சிக்கிய இவர்கள் பின்னர் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(ஐ-17)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 6

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் வே. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். வலயம் 2 இன் கல்விப்பணிப்பாளர் எஸ். சிவராஜா பிரதம விருந்தினராகவும், கரவெட்டிக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசா, மருதங்கேணிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் ஆகியோர்சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(ஐ 8)

# ஆங்கிலதின போட்டிகள்

தென்மராட்சி, ஜூலை 6

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

(ஐ-117)

---

# சஞ்சிகை வெளியீடு

யாழ். இந்துமகளிர் கல்லூரியின் வணிகமன்றத்தின் 1998 ஆம் ஆண்டுக்கான வணிகவிழாவும், வருடாந்த 'வணிக வனிதை' சஞ்சிகை வெளியீடும் 06-07-98 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

– வணிக மன்றம்

(57370)

---

# யாழ்.மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம்

பதிவு இல. PN / PRI 183 - 1992.10.27

## அறிவித்தல்

1. சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் 1998 ஒகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.
2. அகில இலங்கை அரச உள்ளூராட்சி ஓய்வூதியர் சங்கங்களின் அதிகார சபையுடன் (All Ceylon State & Logal Goverment Pensioner's Joint Association) ஓர் அங்கமாக எமது சங்கம் இணைக்கப்பட்டுள்ளது. எனவே அகில இலங்கை ரீதியான ஆதரவுடன் ஓய்வூதியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடைமுறைப்படுத்தப் படுகின்றன.
3. சம்பள மீளாய்வு செய்யப்படும் பொழுது ஓய்வூதியர்களுக்கு ஓய்வு பெறும் பொழுது வகித்த பதவிக்கேற்ப மீளாய்வு செய்யப்பட்ட சம்பள அடிப்படையில் ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசாங்கத்தைக் கோருதல.
4. இடம் பெயர்ந்தோர் மீளக் குடியமர்வதற்கும், மீளக் குடியமர்வு நிவாரணம் பெறுவதற்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்வல்.
5. தடங்கலற்ற ஓய்வூதியம் பெறுவதற்கான ஒழுங்குகள் கண்காணித்தல்.
6. ஓய்வூதியர் காப்புறுதி, முதியோர் இல்லம் அமைத்தல் போன்ற அணுகு முறைகள் கண்காணிக்கப் படுகின்றன.
7. சங்க நடவடிக்கைகளை வருடாந்தக் கூட்டத்திற்கு முன் விரிவான விவரங்களைப் பெற விரும்புவோர் தலைவருடன் அல்லது செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.
8. வருடாந்தக் கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் தமது பிரேரணைகளை ஜூலை 1998 - 25 ஆம் திகதிக்கு முன் செயலாளருக்குச் சமர்ப்பிக்கவும்.
9. அங்கத்துவ சந்தா 1996, 1997, 1998 (வருடம் 60/-) செலுத்தாதவர்கள் காசுக் கட்டளை மூலமாகப் பொருளாளருக்குச் சமர்ப்பிக்கவும். அல்லது தங்கள் பிரதேச செயலகப் பிரிவுக்குரிய சங்கப் பிரதிநிதிகள் மூலமாகச் சந்தாவைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரதேசப் பிரதிநிதிகள்

| | |
|---|---|
| 1. யாழ்ப்பாணம்: | திரு. P. பாலசுப்பிரமணியம் 15/5, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| 2. நல்லூர் | திரு. S. திருநாவுக்கரசு, 44, அன்னசத்திர ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| 3. தென்மராட்சி; (சாவகச்சேரி) | திரு. க. முருகேசர். 50 A, சரசாலை வடக்கு, சாவகச்சேரி. |
| 4. வடமராட்சி தெற்கும் மேற்கும் கரவெட்டி<br>5. வடமராட்சி வடக்கு பருத்தித்துறை | திரு. M. கந்தையாபிள்ளை, 145, சன்னதி வீதி, அச்சுவேலி. |
| 6. வலிகாமம் கிழக்கு கோப்பாய் | திரு. A. பாலசுப்பிரமணியம் கொட்டியவளை, பத்தைமேனி, அச்சுவேலி. |
| 7. வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை<br>8. வலிகாமம் தெற்கு உடுவில் | திரு. E. S. விஜயராஜசிங்கம் (பொருளாளர்) ஜீவபதி, நீதிமன்ற வீதி, மல்லாகம். |
| 9. வலிகாமம் தென் மேற்கு சண்டிலிப்பாய்.<br>10. வலிகாமம் மேற்கு சங்கானை | திரு. T. இரத்தினசபாபதி வல்லை வீதி, தொட்டிலடி. சங்கானை |

ஒருங்கிணைந்த ஓய்வூதியர்கள் செயற்பாடே பிரச்சினைகளுக்கு இன்றியமையாத தீர்வு, எனவே அனைவரும் சங்கத்தில் இணைந்து செயற்படுவோமாக.

சங்கத்தின் செயலகம்:
526, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

திரு. க. நமசிவாயம்
கௌரவ செயலாளர்
193/4, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. S.R. சண்முகரத்தினம்,
தலைவர்
526, பலாலி வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்,

1998 - 07 - 04 (57360)

---

உ

குகமயம்

# உபநயன பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆனித்திங்கள் இருபத்திரெண்டாம் நாள் (06 - 07 - 1998) திங்கட்கிழமை பூர்வபட்ஷ துவாதசி திதியும் அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் சந்திரவோரையும் கூடிய காலை 5.33 மணிமுதல் 6.23 மணிவரையுள்ள மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளையில்

வட இலங்கை புங்குடுதீவு மடத்துவெளி வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு
பாரத்துவாஜகோத்ரோத்பவர் அமரர் சிவஸ்ரீ நா. கணேசராஜக் குருக்கள் (சின்னத்துரை ஐயா) அவர்களினதும்,
வட இலங்கை அச்சுவேலி பத்தமேனி விநாயகர் ஆலய பிரதமகுரு
பிரம்மஸ்ரீ மு. சிவசுப்பிரமணிய சர்மா அவர்களினதும் பௌத்திரனும்,
எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய

**சிரஞ்சீவி செல்வன் சக்திதரன்** அவர்களுக்கு

உபநயன பிரம்மோபதேசம் செய்யக் குறிஞ்சிக்குமரன் திருவருள், குருவருள் ஒன்று சேர நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆசீர்வதித்து வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைபவ இடம்: ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயம்
Singerbrink Str. 34, 51643 Gummersbach Germany

- மு. சிவசுப்பிரமணியசர்மா தம்பதிகள்

பத்தமேனி,
அச்சுவேலி. (57364)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## செம்மணியில் தேடுதல்

செம்மணியில் உள்ள இராணுவக் காவலரணை அண்டிய பகுதிகளில் நிலத்தைத் தோண்டி சடலங்கள் இருக்கின்றனவா என்று தேடுதல் நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் விடுத்த இந்தக் கோரிக்கையைத் தட்டிக் கழிக்காது அரசு உடன் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

செம்மணிக்காவலரணை அண்டிய பகுதிகளில் சுமார் 400 சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள தகவல் அல்லது குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமானதாகும்; தட்டிக்கழிக்க முடியாததாகும்.

கிருஷாந்தியும் மற்றும் மூவரும் கொல்லப்பட்ட அதே காலத்தில்— 1996 ஜூலை முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில்— மொத்தம் 780 பேர் கைது செய்யப்பட்டும், காணாமலும் போயிருந்தனர்.

யாழ்ப்பாணம் நகரக் கொமாண்டராகப் பதவி வகித்த பிரிகேடியர் ஹமங்கொட 1996 ஜூலை 4 ஆம் திகதி தற்கொலைக்குண்டுதாரியினால் கொலை செய்யப்பட்டார். அதே ஜூலை மாதப்பிற்பகுதியில் முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டதில் 1,300 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இந்த இரு சம்பவங்களுக்கும் பழிவாங்கும் விதத்தில் குடாநாட்டு இளைஞர்கள் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுக் கொல்லப்பட்டிருப்பர் என்ற சந்தேகம் நிலவியது; நிலவுகிறது.

காணாமற் போனவர்கள் குறித்து அரசாங்கம் விசாரணைகளை நடத்திய போதிலும் குறைந்த எண்ணிக்கையினர் குறித்த விவரமே அறியப்பட்டது; வெளியிடப்பட்டது.

யாழ். வந்திருந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் நடத்திய விசாரணைகளின் பின்னர், 1997 நவம்பர் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட அந்தச் சபையின் அறிக்கையில், குடாநாட்டில் காணாமற் போனவர்களில் அனேகர் கொல்லப்பட்டுவிட்டனர் என்று கூறப்பட்டிருந்தது.

அரசு இது குறித்துக் குறிப்போ, மறுப்போ தெரிவிக்கவில்லை. மக்கள் தரப்புப் பிரதிநிதிகளும் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை நிறுவ ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருந்த போதிலும் நேற்று வரை அது நடக்கவில்லை.

இவை யாவும், சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்த தகவல் உண்மையாகவே இருக்கும் என்பதனையே பெரும்பாலும் சொல்கின்றன.

ஆகையால் செம்மணிக் காவலரண் பகுதியை அண்டிய பகுதிகளில் நிலத்தைத் தோண்டித் தேடுதல் நடத்த வேண்டும். முந்திய அரசாங்கத்தினர் காலத்தில் தென்னிலங்கையில் நடத்தப்பட்ட படுகொலைகளை நிறுவுவதற்காகப் புதைகுழித் தேடுதல் நடத்தும் அரசு செம்மணியிலும் அவ்வாறே செய்ய வேண்டும். தனது பதவிக் காலத்தின் புதைகுழிப் பயங்கரத்தை, படு பாதகத்தை, கொடுமையை மூடி மறைக்கக் கூடாது.

## மருதங்கேணி கோட்டத்தில்

# பாடசாலை மாணவருக்கு நோய்த் தடுப்பு மருந்து

செம்பியன்பற்று, ஜூலை 6

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் நோய்த் தடை மருந்துகள் பாடசாலைகள் தோறும் சென்று ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன் முதற் கட்டமாக சடந்த வெள்ளிக்கிழமை மாமுனை அ. த. க. லவன் பாடசாலை, ஆழியவளை சீ. சி. த. க. வித்தியாலயம், செம்பியன்பற்று றோ. க. த. க பாடசாலை ஆகியவற்றில் ஆண்டு ஒன்று மாணவர்களுக்கு இரு கூட்டுத்தடை மருந்தும், போலியோ தடை மருந்தும் வழங்கப்பட்டன.

ஆண்டு 5 மாணவர்களுக்கு ஏற்புத்தடை மருந்து ஏற்றப்பட்டது. விரைவில் ஏனைய பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கும் இத்தடை மருந்துகள் ஏற்றப்படும் என பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்தனர். (ஐ-36)

# யுத்தச் செய்தித்தணிக்கை உடனடியாக நீக்கமில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

யுத்தம் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளதால் போர்ச் செய்திகள் தொடர்பான தணிக்கையைத் தற்போது நீக்கும் சாத்தியம் இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மேற்படி சங்க உறுப்பினர்களுக்கு அலரிமாளிகையில் இராப்போசன விருந்துபசாரமொன்றை அளித்தார்.

அந்த வைபவத்தில் உரையாற்றிய வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத் தலைவியான 'இந்தியன்- எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் கொழும்புச் செய்தியாளர் நிருபமா சுப்பிரமணியன்—

தற்போது அமுலில் உள்ள போர்ச் செய்தித் தணிக்கையால் செய்தியாளர்கள் விசனமடைந்துள்ளதாகவும் அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதிலுரை வழங்கிய ஜனாதிபதி—

இந்தப் பத்திரிகைத் தணிக்கை அமுல்படுத்தப்படுவதற்கு ஒரு சில பத்திரிகையாளர்களே காரணம். அவர்கள் தற்போது இந்த வைபவத்திற்கு வரவில்லை. ஆயினும் வடக்குக் கிழக்குப் போர் இக்கட்டான சூழ்நிலையை அடைந்துள்ளதால் போர்ச் செய்திகளுக்கான தணிக்கையை இப்போது நீக்க முடியாது. ஆகவே பத்திரிகையாளர்கள் இதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

செய்தித் தணிக்கை தொடர்பாக எழுப்பப்பட்ட மேலதிக கேள்விகளுக்கு அவர் விடையளிக்க மறுத்துவிட்டார். (ஐ-ரீ)

# வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் தொடர்கிறது

திருகோணமலை, ஜூலை 6

திருகோணமலை மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் அலுவலகத்துக்கு முன்பாக சாகும் வரையான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் சனியன்று தொடர்ந்து இடம் பெற்றது.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த போது மயங்கி வீழ்ந்த எஸ். புஸ்பராசா என்ற பட்டதாரி மாணவர் தொடர்ந்தும் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர் தனக்கு சிகிச்சை அளிக்க வேண்டாமென வாதாடி வருவதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதென்ற மாகாணக் கல்வி அமைச்சின் முடிவை தாம் ஏற்றுக்கொள்வதாகவும்—

எனினும் தம்மால் சமர்ப்பிக்கப்படும் பட்டியலில் உள்ளவர்களுக்கே நியமனம் வழங்கவேண்டுமென அவர்கள் கோரியுள்ளதாகவும் வேறொரு செய்தி தெரிவித்தது.

அதேசமயம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு முன்பாக ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் ஒன்றைப்பெற்றுத்தருவது என்ற ஆளுநர் காமினிபொன்சேகாவின்முடிவை தாம் எதிர்பார்த்திருந்ததாகவும்—

எனினும் எந்தவிதமான பதிலையும் ஆளுநர் தமக்கு அளிக்கவில்லையெனவும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டோர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆளுநரின் அலுவலகத்துக்கு அருகேயுள்ள வீதியில் நடத்தி வரும் சுழற்சி முறை உண்ணாவிரதம் சனிக்கிழமை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

### நாளை

ஆனி - 23

செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி முன்னிரவு 10.04 வரை; நட்சத்திரம்: கேட்டை பின்னிரவு 03.12 வரை; பிரதோஷ விரதம்

சுபநேரம் 10.28 - 11.58
ராகுகாலம்: 02.58 - 04.28

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உலக விவகாரத்தில் ஒருவன் மீது ஒருவன் பழி சுமத்துகிறான். ஆனால் அன்பின் சாம்ராட்சியத்திலோ ஒவ்வொருவனும் தன்மீதே பழியை இழுத்துப் போட்டுக் கொள்ளப் பார்க்கிறான்.

— கார்ண்டேகர்

# மாவிட்டபுர ஆலய பூசையில் பக்தர்கள்

சண்டிலிப்பாய், ஜூலை 6

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு தினமும் முற்பகலில் அபிஷேகம், பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 29 ஆம் திகதியன்று ஆரம்பமாகிய உற்சவகால பூசையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வரும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த அடியார்கள் இப் பூசைகளில் வந்து கலந்து கொள்வதுடன் விரதம் அனுட்டித்தும் வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஆலயத்திற்கு வழிபாட்டுக்காக செல்பவர்கள் தெல்லிப்பழை துர்க்காபுரத்திற்கு அப்பால் உள்ள பாதுகாப்பு படைமுகாமில் தங்கள் தேசிய அடையாள அட்டையை ஒப்படைத்து விட்டு அங்கு தரப்படும் விசேட அனுமதி அட்டையுடன் விசேட பஸ் வண்டியில் ஏற்றிச் செல்லப்படுகின்றனர். பின்னர் பூசைவழிபாடு முடிந்ததும் அதே பஸ் வண்டி மூலம் தெல்லிப்பழையில் கொண்டு வந்து இறக்கப்படுகின்றனர். ஆலய மேற்கு வீதியில் இராணுவத்தினரின் தேநீர்க் கடை ஒன்றும் செயற்பட்டு வருகின்றது. (ஐ-135)

# அதிபர், ஆசிரியர் ஒய்வூதியம் தாமதம்

அரச ஊழியர் இளைப்பாறியஅடுத்த மாதமே அவரின் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கை. ஆனால் தெல்லிப்பழை கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள பாடசாலை அதிபர், ஆசிரியர் இளைப்பாறி 18 மாதங்களாகத் தமது ஓய்வூதியத்திற்காக கல்விக் கோட்ட அலுவலகம், வலயம்1, வலயம்11 ஆகிய அலுவலகங்களுக்கு அலைக்கழிந்து திரிந்தும் பலன் கிடைக்கவில்லை. விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை.

இன்றைய நிலையில் மாதாந்தம் சம்பளம் பெற்றும் வாழ்க்கை நடத்துவது பெரிய கஷ்டமாகவுள்ளது. இவ்வாறான நிலையில் 18 மாதங்களாக ஓய்வூதியமின்றி எவ்விதம் குடும்பச் செலவைத் தாங்க முடியும். எமது தமிழ் மண்ணில் கடமை புரியும் அரச ஊழியர்கள் இதனைச் கருத்திற் கொண்டு மனிதநேய உள்ளத்துடன் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.



தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் ஒரு வித்தியாசமான அலுவலகம். கோட்டக்கல்வி அதிகாரி அநேக வேளைகளில் அங்கு இருப்பதில்லை, பாடசாலைகளுக்குச் சென்று விடுவார். நிதி உதவியாளரை வலயம்1 வலயம் 11 அலுவலகங்களில் அடிக்கடி காணக்கூடியதாக இருக்கிறது. பெண் எழுதுவினைஞர்கள் மட்டும் தத்தமது கதிரைகளில் இருப்பர். நாங்கள்சேவைக்குப் புதியவர்கள் உங்கள் பிரச்சினைகளை அதிகாரிகளிடம் கதையுங்கள் என்று பெண் ஊழியர்கள் கூறுகிறார்கள்.

சென்ற ஏப்ரல் மாதம் அலுவலகத்தில் ஓய்வூதியம் பற்றி விசாரித்த போது 04. 05. 98 இல் புதிய கல்விவலயங்கள் உருவாக்கப்படுகின்றனவென்றும், எங்களது ஓய்வூதியம் புதிய கல்வி வலய அலுவலகத்தினால் வழங்கப்படும் என்றும் நிதி உதவியாளர் கூறினார். இது பற்றி கோட்டக் கல்வி அதிகாரியிடம் முறையிட்ட போது அலுவலக உதவியாளர் பதவி வெற்றிடமாகவுள்ளது; விடயம் தெரிந்த அனுபவம் மிக்க ஒருவர் நியமிக்கப்பட்டால் உங்கள் பிரச்சினை எல்லாம் தீர்ந்து விடும் என்று கூறுகிறார்.

கல்வி வலயம் இரண்டின் மதிப்பார்ந்த பணிப்பாளர் அவர்கள் தெல்லிப்பழைக் கோட்டத்தைப் புனரமைத்து எமது ஓய்வூதியம் விரைவில் கிடைக்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்து தருவார் என்ற நம்பிக்கையுடன் ஓய்வூதியத்தை எதிர்பார்க்கின்றோம்.

பாதிக்கப்பட்ட அதிபர்

இணுவில் கிழக்கு.

# தமிழ் அரசியற் கைதிகளின் நிலை

தென்னிலங்கைக் கிளர்ச்சியாளர்களான மக்கள் விடுதலைமுன்னணி(ஜே.வி.பி)சந்தேக நபர்களை நீண்டகாலம் விசாரணைகள் எதுவுமின்றிச் சுமார் 5 வருடங்கள் வரை சிறையில் முடக்கி வைப்பதற்கான முயற்சியில் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா அவர்கள் ஈடுபட்டார்கள். சர்வதேச அழுத்தங்களினால் இம்முயற்சி கைவிடப்பட்டது.

ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் அரசியற் கைதிகள் மறைமுகமாக இந்நிலைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குகள் இழுத்தடிப்பு, ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளை ஒரு கைதி மீது தொடராகச் சுமத்துதல் போன்றவைகளினால் கைதிகள் உளவியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலைமைகளை வெளியுலகின் கவனத்திற்குக் கொண்டுவந்து நிவர்த்திப்பதற்காகவும், ''தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி' என்பதை வெளிப்படுத்தவும் காலத்திற்குக் காலம் உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

ஆரம்ப காலங்களில் இப் போராட்டங்கள் சிறை அதிகாரிகளினால் பலவந்தமாக முறியடிக்கப்பட்டன. பின்னர் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளால் உறுதிமொழிகள் வழங்கப்பட்டும் செயற்படுத்தப்படவில்லை. அதனைத் தொடர்ந்து ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் நேரடியாகச் சென்று உறுதிமொழிகள் வழங்கியதை அடுத்து அவ்வேளைகளில் போராட்டங்கள் கைவிடப்பட்டன. நாளடைவில் தாம் ஏமாற்றப்பட்டதை அவர்கள் உணர்ந்தனர்.

சமீபத்திய களுத்துறைச் சிறைச்சாலைச் சம்பவம் அவர்களின் உள்ளக்கிடக்கையையே வெளிப்படுத்தியது. விசாரணை என்ற பெயரில் அவர்களைத் துன்புறுத்துதல் ''வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது'' போன்றதாகும்.

செ. சுந்தரமூர்த்தி,
தலைவர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை.

கரவெட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி
# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட மலர்

06 – 07 – 1998

## ஆலயப் பிரதமகுரு அருளாசி

மரகத மணி நீலம், இங்கிணி யுக்த பாதம்
பிறகடித முக மீசம் பாது சோமாக்கினி நேத்ரம்
ஹரிகர மணி கேடம் திரியகூடி மலர்கிற ஹஸ்தம்
விதிகரம் ஹிபூஷம் வீரபத்திரம் நமாமி

சரித்திரப் புகழ்பெற்ற உடுப்பிட்டி பத்திர காளிஅம்பிகா சமேத வீரபத்திரேஸ்வர சுவாமிக்கு புதிதாக அழகுற நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேரினது வெள்ளோட்ட விழாக் காணும் இந்த நன்னாளில் இவ்வூர் மக்கள், அடியார்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியும் தெய்வீக அருளுடைமையும், ஆனந்தமும் பொலிந்து காணப்படுகின்றது. இச் சிறப்பான தேரை திறம்பட அமைத்த ஸ்தபதி நாகரத்தினம் மகேந்திரனின் கலைப்பணி வளர வாழ்த்தி, எல்லாம் வல்ல வீரபத்திர சுவாமியின் அருட்கடாட்சம் கிட்ட பிரார்த்திக்கின்றோம்.

வளர்க மக்கள் பணி!

சுபமஸ்து

*சிவஸ்ரீ ச. சாமி. கனகசபாபதிக் குருக்கள்*

## சிவபுண்ணியச்செயல்

சித்திரத் தேர் உருவாகும் போது தேர்த் திருப்பணிக்கென ஊர் மக்கள் உவந்தளிக்கும் அன்பளிப்பும், தேர் உருவாகி அதில் எம்பெருமான் ஆரோகணித்துத் திருவீதி உலா வரும் போது பக்தியுணர்வுடன ஊர்மக்கள் கூடித் தேர் இழுக்கும் சிறப்பும் சிறந்த சிவ புண்ணியச் செயல்கள். இவ்வரிய செயல்களுக்கு நிலைக்களனாய் அமையும் இச் சித்திரத்தேர் சிற்பக்கலை வல்லுநராகிய திரு. நாகரத்தினம் மகேந்திரனினதும், அவரது உதவியாளர்களினதும் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டதாகும்.

இருபத்திரெண்டு அடி உயரங்கொண்ட இத் தேர் தெய்வீக வரலாறுகளைச் சித்திரிக்கும் கலை வடிவமாக அமைவதோடு இவ்வாலயத்தில் உருவாக்கப்படும் முதற் தேராக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

சிறப்பு வாய்ந்த பிரமோற்சவ விழாவின் நிலைக்களனாக அமையும் இச்சித்திரத் தேர் உருவாக்கத்தில் அர்ப்பணிப்புச்சிந்தையுடன் ஈடுபட்ட கலைஞர்கள், அறங்காவலர்கள், அடியார்கள் அனைவருக்கும் எம் பெருமான் ஸ்ரீ வீரபத்திர சுவாமியின் திருவருள் பொலிவதாகுக.

சித்திரத்தேர் வெள்ளோட்டம் வெற்றிகரமாக நடைபெறவும், அனைவரும் இனிதே வாழவும் எம்பெருமானின் திருவருட் சக்தி துணை நிற்பதாக.

*பேராசிரியர் கலாநிதி*
*ப. கோபாலகிருஷ்ண ஐயர்*
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## நல்ல சகுனம் இது

உடுப்பிட்டிப் பதியில் எழுந்தருளியிருக்கும் சந்திரசேகர வீரபத்திரசுவாமி இன்று தேரூர்ந்து திருவுலா வரவுள்ளார். நூற்றிஐம்பது வருடங்களாகத் திருவிழாக்கள் நடைபெற்று வரும் இத் திருத்தலத்திலே இந்த வருடம்தான் எம்பெருமான் தேரில் திருவுலா எழுந்தருள உள்ளார்; எமது நாட்டுக்கும், இனத்திற்கும், சமயத்திற்கும் இது நல்ல சகுனமாக அமைகின்றது.

அடியார்களின் பக்திச் சிரத்தையுடனான அன்பளிப்புக்களினாலும், தேர்த்திருவிழா உபயகாரர் திரு. பொ. வேலாயுதம் அவர்களின் பொன் மனப் பொலிவினாலும் இன்று இந்த அழகிய சித்திரத்தேர் அணிபெற்றுத் திகழ்கின்றது.

இத்தேரினை அழகுற வடிவமைத்து ஆக்கிய சிற்பி நா. மகேந்திரன் அவர்களையும், அவரது தொண்டினையும் மனமகிழ்ந்து பாராட்டுவோம். அவரது தெய்வீக் கலையும், பணியும் சிறக்க வாழ்த்துவோம். சந்திரசேகர வீரபத்திரசுவாமியின் திருவருள் எல்லோருக்கும் கிட்டுவதாக.

*கலாநிதி எஸ். சிவலிங்கராஜா*
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

## நல்லை ஆதீன முதல்வர் அருளாசி

*சிவநேயச் செல்வர்களே!*

உடுப்பிட்டியில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சந்திரசேகர வீரபத்திர சுவாமிக்கு புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சி நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தேர் உலகத்தைக் காட்டுகிறது. அதனால் தான் எல்லோரும் தேரினுடைய வடத்தைப் பிடித்து இழுக்கும் போது வாழ்க்கைத் தத்துவத்தை உணரக்கூடியதாக அமைந்துள்ளது.

வீரபத்திர சுவாமி முதன் முதல் பவனிவரும் சித்திரத்தேரை சிறந்த கலையம்சங்களுடன் உருவாக்கிய உடுப்பிட்டியைச்சேர்ந்த சிற்பக்கலைஞர் இந்திரா கலாலய ஸ்தபதி நாகரத்தினம் மகேந்திரன் அவர்களின் பணி வளர வாழ்த்தி ஆசி கூறி வெள்ளோட்ட விழா சிறப்புற இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்*
குரு மகாசந்நிதானம்
திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்.

## ஸ்தபதியின் வாழ்த்து

அருள்மிகு சந்திரசேகர வீரபத்திரசுவாமிக்கு புதிய அழகிய சித்திரத்தேர் ஒன்று உருவாகியிருப்பது உவகை தருகின்றது. சைவமக்களின் தெய்வீகப் பண்புகளை நிலைநாட்டும் பண்பாட்டுக் கலைச் சின்னமாகச் சிற்ப சித்திரத் தேர்கள் விளங்குகின்றன.

சிற்பம் ஒரு தெய்வீகக்கலை. இக்கலையில் விளங்க சிற்பாகம நூலறிவும், அவதானிப்புத் திறனும், கற்பனையாற்றலும் இன்றியமையாதவை.

எனது மூதாதையினரால் 120 வருடங்களுக்கு முன்பாக மானிப்பாய் மருதடி விநாயகருக்கு சித்திரத்தேர் உருவாக்கியிருந்த போதிலும் உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி பவனிவர உள்ள சித்திரத்தேர் எனது கன்னிப்படைப்பு எனக் கூறுகையில் மட்டற்ற மகிழ்ச்சியும், ஆனந்தமும் அடைகிறேன்.

எல்லாம் வல்ல எம்பெருமான் இச்சித்திரத் தேரிலேறி எல்லோருக்கும் எல்லா நலனும் அருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

*நா. மகேந்திரன் ஆசாரி*
இந்திராகலாலயம், உடுப்பிட்டி

## பிரதேச செயலரின் வாழ்த்து

மனிதனது ஆணவ மலம் உலகில் அன்பு, அமைதி, சாந்தி, சமாதானம் ஆகிய பண்பாட்டு விழுமியங்களை சிதறடித்துக் கொண்டிருக்கிறது ஆகவேதான் மனித மனம் செம்மையுற்று ''எல்லோரும் வாழவேண்டும் உலகம் இன்புற்று இருக்கவேண்டும்'' என்ற அறநெறிக்கோட்பாட்டுக்கு உலகை வழிநடத்திச் செல்லும் உபாயமாக ஆலய வழிபாடு அத்தியாவசியமானது என்று நம்முன்னோர்கள் நம்பினார்கள். அதற்காக ஆங்காங்கே ஆலயங்கள் அமைத்து வழிபட்டார்கள். நித்திய, நைமித்திய வழிபாடுகளும், மகோற்சவ விழாக்களும் ஆலயங்களில் நடத்தி வந்தார்கள்.

ஆலயத் திருவிழாக்களில் தேர்விழா மிகமுக்கியமானது. நீண்டகாலமாக உடுப்பிட்டியூர் அருள்மிகு சந்திரசேகர வீரபத்திரப் பெருமானுக்கு தேர்விழா நடைபெறவில்லை. புதுப்பொலிவுற்ற வீரபத்திர ஆலயத் தேர்விழாவுக்கு என்று முதன் முதலாகச் சித்திரத்தேரை உருவாக்கிய உடுப்பிட்டியூர் சிற்பாசாரி நாகரத்தினம் மகேந்திரன் அவர்களுக்கு எனது பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகுக.

அத்தேரில் வீரபத்திரப் பெருமான் ஆரோகணித்து வீதிவலம் வந்து அருள் வழங்கவும், அடியார்கள் கண்டுகளித்து ஆனந்தமடையவும் பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

*செ. ஸ்ரீநிவாசன்*
*பிரதேசசெயலர்*
வடமராட்சி தெற்கு – மேற்கு
பிரதேச செயலகம்.

## சிவத்தமிழ்ச் செல்வி ஆசி

மகாகும்பாபிஷேகங்களினாலும் நித்திய நைமித்திய பூசைகள், விழாக்களினாலும் புதுப் பொலிவும், அற்புதமும் நிறைந்து விளங்குவது சைவத் திருக்கோயில்களாகும். மகோற்சவத்தில் சிறப்பங்கமாக விளங்குவது இரதோற்சவமாகும். இது ஐந்தொழில்களில் சங்காரத் தொழிலை உணர்த்தி நிற்பதாகும். இதற்குரிய பொருள் அழித்தல் என்று சொல்லப்பட்டாலும் அது தீயவற்றை அழித்து நல்லவற்றை மேலோங்கச் செய்யும் அருள்நிறைந்த சங்காரமாகும்.

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்டத்தில் பங்கு கொள்ளும் பாக்கியம் இவ்வூர் மக்களுக்குக் கிடைத்தற்கரிய பேறாகும். இவ்வாலயம் நூற்றியைம்பது ஆண்டுகள் பழமை உடையது என்பதை அறிகிறோம். பழமையும் அருட்சிறப்பும் கொண்டு விளங்கும் வீரபத்திரப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் உருவாக்கிய பெருமை ஆலயத் திருப்பணிச்சபையினருக்கு ஒரு மகத்தான பேறாகும்.

சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா சிறப்புறவும், பெருமானின் திருவருள் அனைவர் உள்ளத்திலும், வாழ்விலும் மேலெழுந்து நிற்கவும் திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

*சிவத்தமிழ்ச் செல்வி*
*தங்கம்மா அப்பாக்குட்டி*
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## வீரபத்திர சுவாமியின் திருவருள்

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவிலில் நூற்றைம்பது வருடங்களுக்கு மேலாக மகோற்சவம நடைபெற்று வந்தும் இதுவரை தேர்த்திருவிழா நடைபெறவில்லை. வீரபத்திர சுவாமியின் திருவருளால் திரு. பொ வேலாயுதமும் சகோதரர்களும் அழகிய சிற்பத்தேரை ஸ்தபதி நாகரத்தினம் மகேந்திரனைக் கொண்டு உருவாக்கி இன்று வெள்ளோட்டம் நடைபெறுவது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியதாகும்.

தேர் நிர்மாணப் பணி மிகக்குறுகிய காலத்தில் ஸ்தபதி மகேந்திரனால் நிறைவேற்றப்பட்டது அவரின் கலை நுட்பத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

வீரபத்திரசுவாமியின் திருவருளால் கோவிலுக்குரிய திருப்பணிகள் யாவும் சிறப்புற நடைபெற்று உடுப்பிட்டியூர் மக்கள் சகல வளங்களுடன் சிறப்புற அவரது பாதாரவிந்தங்களை சிரந்தாழ்த்தி வணங்குகிறேன்.

*அ. சி குமாரசுவாமி*
தலைவர்,
தர்மகர்த்தா சபை.

## குலதெய்வத்துக்குத் தேர்

எங்கள் குலதெய்வம் சந்திர சேகர வீரபத்திரசுவாமி முதன் முதல் சித்திரத்தேர் ஏறி அடியார்களை அருள்பாலிக்க உள்ள இப் புனித நாள் உடுப்பிட்டியூர் மக்களுக்கு ஒரு பொன்னாளாகும்.

இதில் அடியேனை பங்கு கொள்ள வைத்தமை எம்பெருமான் அருளே. ஆம், எங்கள் குடும்பத்தில் 1986 இல் நடைபெற்ற இயற்கைப்பேரிழப்பே எனது நேர்த்திக்கு காரணமாகின. பொருத்தமற்ற சந்தர்ப்ப சூழ்நிலை, நிதிவசதிக்குறைவு ஆகிய காரணங்களால் 12 வருடங்களுக்குப் பின்னராவது எனது நேர்த்தி பூர்த்தியாகியது குறித்து மனம் சாந்தியடைகின்றேன்.

இத்தேரை உருவாக்கிய இளம் ஸ்தபதி நா. மகேந்திரன் மிகக் குறுகியகாலத்தில் நிறைவேற்றியமை எம்பெருமான் திருவருளே.

வீரபத்திரப் பெருமான் தேர் மீது ஆரோகணித்து வரும் தெய்வீகத் திருக்காட்சி எமது ஆலயவரலாற்றிலே அபூர்வமானது; அற்புதமானது.

'தேரினை இழுத்து திருவருள் பெற்றே
சீருடன் வாழ்வோம் செழித்து'

*பொ. வேலாயுதம்*
(ஆசிரியர், தேர்த்திருப்பணி உபயகாரர்)

இன்று நடைபெறும் இச் சித்திரத்தேரின் வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெறப் பிரார்த்தித்து இச் சித்திரத்தேரை உருவாக்கிய ஸ்தபதி நா. மகேந்திரன் அவர்களையும் ஏனைய கலைஞர்களையும் பாராட்டுவோர்:

ஜெகா
மோட்டோஸ்
நெல்லியடி, கரவெட்டி.

தங்கராசா ஆறுமுகம்
நகைமாடம்
சந்தை ஒழுங்கை, உடுப்பிட்டி.

[illegible]
உடுப்பிட்டி.

புதிய விஞ்ஞானக்
கல்வி நிலையம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

MODERN
EDUCATION CENTRE
NELLIADY, KARAVEDDY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு வேலையற்ற...

(2 ஆம் பக்கத் தொடர்)

உண்ணாவிரதப்போர் நின்றிருக்குமல்லவா? இதை நாம சற்றுச் சிந்திக்கவேண்டும்.

இது விடயத்தில் வடக்கு—கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் டிவகலாலா 110 பேரின் பெயரையும் கணனியில் போட்டுப் பார்த்து அண்மையில்(1997)பட்டம் பெற்றவர்களை விடுத்து ஏனையோருக்கு நியமனம் தருவதாகப் பதிலளித்தார். அப் பதிவில் தமது நோக்கம் நிறைவேறாது எனத் தெரிந்து கொண்ட அச் சங்கம் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடர்கிறது.

இந்த உண்ணாவிரதத்துக்கு தமிழாசிரியர் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது. இதில் அதிசயம் என்னவென்றால் 19–11–1997 இல் நாம் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் செய்தபோது அதைஎதிர்த்து அறிக்கை விட்டதும் இதே தமிழாசிரியர் சங்கம் தான். அப்போது செயலாளர் டிவகலாலாவுடன் ஒற்றுமையாக ஒரு மேசையில் இருந்து உறவாடியவர்கள் இப்போது பிரிந்துவிட்டனர். டிவகலாலா மீது உள்ள காழ்ப்புணர்வைத் தீர்த்துக் கட்டவே இப்போது தமிழாசிரியர் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இத்தகையவர்கள் யுத்தம் நடக்கும் போதாவது தமது சந்தர்ப்பவாதத்தை ஒத்திவைக்க வேண்டும். மேலும் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற சாத்வீகப் போராட்டம் புனிதமானது. அந்த மேலான போராட்டத்தை எவரும் எப்படியும் எந்த விடயத்திற்கும் பாவித்தால் அதன் கனதி என்னவாகும்? மற்றவரின் உடல்நிலையை பாதிப்படைய வைத்து ஆசிரியர் நியமனம் பெறுவதும் எமது சங்கத்தின் நோக்கமல்ல. எனவே யதார்த்தத்திற்குப்பொருத்தமான—பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில், பல்வேறு திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் உள்ள நியமனங்களையும் உள்ளடக்கிய தான வேலைவாய்ப்புக்களை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு இணைந்த சாத்வீகப் போராட்டங்களை ஒற்றுமையுடன் முன்னெடுத்துச் செல்லுவோம் — என்று உள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் யாழ். கல்வி வலயம் I இன் அலுவலகத்துக்கு முன்னால் 19 - 11 – 1997 இல் போராட்டம் நடத்தியதாக மேற்படி அறிக்கையில் குறிப்பிடப் பட்டது தவறாகும். அது டிசம்பர் 19ஆம் திகதியே நடைபெற்றது.

ஆசிரிய தெரிவுக்கான போட்டிப் பரீட்சையின் பின்னர் ஆசிரிய நியமனங்கள் வழங்குவதற்காக அப்போது 580 பேருக்கு யாழ். கல்வி வலயம் I இன்அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவிருந்தன. அந்த நேர்முகப் பரீட்சைகளை நடத்த விடாமல் தடுக்கும் விதத்திலேயே யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அலுவலக வாசலில் வழிமறிப்புப் போராட்டத்தை நடத்தியது.

''எமது பிரதேசத்துக்குக் கிடைக்கும் ஆசிரிய நியமனங்களைக் கிடைக்கவிடாமல் தடுக்கும் விதத்தில் வழிமறிப்புப் போர் நடத்த முற்படுவது தவறானது''– என்றே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அப்போது 'உதயன்' பத்திரிகையில் வெளியான அறிக்கை மூலம் கேட்டிருந்ததே தவிர, வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைகளைத் தவறு என்று எந்தக்கட்டத்திலும் எதிர்த்ததாகத் தெரியவில்லை. ஆனால் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தற்போது விடுத்துள்ள அறிக்கையில் டிசம்பரில் தாம் நடத்திய போராட்டத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்த்ததாகக் குறிப்பிடுவது வாசகர்களுக்கு தவறான தொனிப்புடனான விளக்கத்தைத் தரக்கூடும் என்பதால் அது இங்கு தெளிவுபடுத்தப்படுகின்றது.

(ஆ-ர்)


உ

ஏழாலை

## ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள்

தேவஸ்தானம்

## பஞ்சமதின இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

ஆரம்பம்: (07-07-1998) செவ்வாய்க்கிழமை

பூஜை காலை — 10மணி அர்ச்சனை காலை—11மணி

அன்னதானம் நண்பகல் — 12-00 மணி

தினமும் காலை 10-00 மணிக்கு பூஜையும் 11-00 மணிக்கு அர்ச்சனையும் நடைபெறும்.

பூர்த்தி (12-07-1998) ஞாயிற்றுக்கிழமை 1008 சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும்.

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் ஆசியுடன் புன்னாலைக் கட்டுவன் சிவஸ்ரீ தி. கெங்காதரக்குருக்கள் நடத்தி வைப்பார்

தினமும் சிவானந்தவாரிதி சிவத்திரு வ. குமாரசுவாமி ஐயா அவர்களின் சொற்பொழிவும் இடம் பெறும்.

(57375) — தேவஸ்தானம்



## புனித உத்தரிய அன்னையின் திருவிழா

அல்லைப்பிட்டி

புனித உத்தரிய அன்னை ஆலயமானது

அ. யோட்ஸ்

அவர்களின் மேற்பார்வையில் பொது மக்களின் ஒத்துழைப்போடு மீண்டும் புனரமைக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி ஆலயத் திருவிழாவானது நாளை 07 — 07 — 1998 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 15 ஆம் திகதி பிற்பகல் 5. 00 மணிக்கு-நற்கருணை விழாவும், 16 ஆம் திகதி காலை 7. 30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் பங்குத்தந்தை மவுலிஸ் அடிகளாரால் நிறைவேற்றப்படும்.

(57378)


## கண்ணீர் அஞ்சலி

## கனகரத்தினம் ஐயா பாலசுப்பிரமணியம் ஐயா

4–7–98 இல் சிவபதம் அடைந்த தீர்த்தாங்குள ஆதீனகர்த்தாவும், பிரபல முத்துச்சப்பற அமைப்பாளருமான பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சி அடைவதுடன், துயரில் வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரும் இடைக்காடு பொதுமக்களும் தமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றனர்.

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை.

(57377)


## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்;

அகல வெண் திரையில்

06-07-98 திங்கள் முதல்

சிவாஜி- காஞ்சனா நடித்த

**சிவந்தமண்**

CD வெளியீடு

காட்சிகள்:- 10-30, 2-30

(57374)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கடைசிவாரமாக

ரஜனி- நக்மா

ரகுவரன், ஜனகராஜ்

நடித்த

**பாட்ஷா**

அடுத்த வெளியீடு!

10 ஆம் திகதி முதல்

**சத்ரிய வம்சம்**

தினசரி

10-30 — 2-00, 5-00

(புதிய நேரம்)

(சி/4203)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

திங்கள், செவ்வாய்

ரஜனி - பிரபு - ராதா நடித்த

**தர்மத்தின் தலைவன்**

புதன், வியாழன்

விஜயகாந்த் - ராதிகா நடித்த

**கரிமேடு கருவாயன்**

நேரம்:- 10-30, 2-30

(பழைய நேரம்)

Tele. No. 070 - 212223

(57309)

யாழ்.

## ரீகல் வெண் திரையில்

இன்று 10-30 மணிக்கு

கமல் - ஸ்ரீதேவி

ஸ்ரீபிரியா நடித்த

**வாழ்வே மாயம்**

நெஞ்சை உருக்கும்

காதல் ஓவியம்

பார்க்கத் தவறாதீர்கள்

2–30 மணிக்கு

ரகுமான் – சுகன்யா

**ஹீரோ**

தினசரி 5 மணிக்கு

[illegible] காண்பிக்கப்படும்

(57379)


## சமய சிந்தனையில்

புலோலி வடமேற்கு அருள்மிகு முருகையன் ஆலயவருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

இம் மாதம் 13 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 15 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(ஐ–109-173)

★ ★ ★

கொழும்புத்துறை ஜூலை 6

யாழ். கச்சேரி கிழக்கு கட்டுக்காயன்பதி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் பாலஸ்தாபன நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம் பெறும். பூர்வாங்க கிரியைகள் நேற்று ஆரம்பமாகின.

(ஐ-30)

★ ★ ★

கைதடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை நண்பகல் 11–30 மணிக்கு தட்சமூல மூர்த்திக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

(ஐ–30)

★ ★ ★

தனங்கிளப்பு அருள்மிகு ஸ்ரீ பெரும்படை கண்ணகை அம்மன் கோயிலின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்த தினம் இன்று திங்கட்கிழமை (ஆனி அனுஷம் நட்சத்திர தினம்) காலை 9. 30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

பளை தம்பகாமம் செருக்கன்காட்டி அம்மன் கோயில் பொங்கல் உற்சவம்இன்றுதிங்கட்கிழமை மாலை ஆரம்பமாகிசெவ்வாய்க்கிழமைபகல் வரை நடைபெறும். (ஐ-117)

## யாழ். மாவட்ட மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8. 30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

யாழ். மாவட்ட விளையாட்டுஅதிகாரி கே. டபிள்யூ விமலராஜன் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

(உ)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 6

''உதயன்'' நிறுவனம் மற்றும் யாழ். றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை, ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளுக்கான கூடைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டிகளை நடத்தவிருக்கின்றது.

யாழ். மாவட்ட ரீதியில் கழக அணிகளுக்கு இடையில் இச்சுற்றுப் போட்டி வருடம் தோறும் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விருப்பும் கழக அணிகளை தமது விண்ணப்பங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக யாழ் பல்கலைக்கழக உடற் கல்வித்துறையில் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

(உ)

## மரண அறிவித்தல்கள்

## இராசரத்தினம் இராமநாதன் (சிறி)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இ. இராமநாதன் 5 - 7 – 98 இல் காலமானார்.

இவர் கோண்டாவில் இராசரத்தினம் கனகம்மா தம்பதிகளின் மகனும், இணுவில் தியாகராசா இராசம்மா (காலஞ்சென்றவர்கள்) ஆகியோரின் மருமகனும், உஷாதேவியின் அன்புக் கணவனும், ரமணன், பிரசன்னா, பிரதீபா, பிரவீணா ஆகியோரது அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி (கனடா), கதிர்காமநாதன் (கனடா), இலட்சுமணன் (ராதா), புஸ்பநாதன், இராஜேஸ்வரன் (கனடா), நாகநாதன் (பழனி), திருலோகநாதன் (கனடா), அமரர் கமலநாதன், சகுந்தலேஸ்வரி (கனடா) ஆகியோரது சகோதரரும், தங்கராசா (கனடா), வரதராஜா (கனடா), இரத்தினம், மகேஸ்வரி, பரமேஸ்வரி, அம்பிகை, வயிரவநாதன் (நாவலப்பிட்டி) ஆகியோரது மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6-7 – 98 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
இராசரத்தினம்
(தந்தை)

இணுவில் கிழக்கு,
இணுவில்.

(57373)

## தம்பையா பாலசிங்கம்

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், வவுனியா குருமண்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பாலசிங்கம் நேற்றுக் காலை (ஞாயிற்றுக்கிழமை) 10 மணியளவில் வவுனியாவில் காலமானார்.

இவர் வவுனியா சில்வா ஸ்ரோர்ஸ் முகாமையாளரும் தேவமனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், யதுகுலனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தம்பையா, திருமதி தம்பையாவின் அன்பு மகனும், துரையப்பா, கார்த்திகேசு (சிவன் கோயில்) காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று காலை 11 மணிக்கு வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
து. கார்த்திகேசு
(மாமன்)

481, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(57381)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலில் வரும் அகதிகளை

# மீளக் குடியமர்த்துதல் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்று திருமலை ஊடாக கப்பல் மூலம் யாழ். மாவட்டத்துக்கு மீண்டும் வருகின்ற மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுவது தொடர்பாக ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல பிரதேச செயலர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (உ-8)

## அச்சுறுத்திப்...

(முதலாம் பக்கம் தொடர்)

உடனடியாக அது குறித்து எமக்குத் தகவல் தந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகைய செயலில் தொடர்ந்து ஈடுபடும் அமைப்புக்களின் சகல செயற்பாடும் முடக்கப்படும்.

''நீதிமன்றங்கள் செயலிழந்ததால் அந்த வேலைகளைத் தாங்கள் செய்யலாம் என சில இயக்கங்கள் நினைக்கின்றன. பிணக்குகள், வழக்குகளை தாங்கள் தீர்ப்பதாகத் தெரிவித்து தீர்ப்புகள், உத்தரவுகளை விடுக்கின்றன; மக்களை மிரட்டி தமது அலுவலகத்துக்கு அழைக்கின்றன;

இத்தகைய செயல்களில் ஈடுபடக்கூடாது என அவர்களுக்குத் திட்டவட்டமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது; எச்சரிக்கப்பட்டுள்ளது.

பொலீஸார் மற்றும் நீதிமன்றங்களின் வேலைகளைச் செய்ய முற்படும் இயக்கங்களுக்கு எதிராகவும் இனி மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தகைய செயலில் ஈடுபட இயக்கங்களைத் தூண்டுவோருக்கும், அதற்கு ஒத்துழைப்போருக்கும் எதிராகவும் கூட கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

''அரசியல் கட்சிகள், இயக்கங்கள் இத்தகைய ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டால் அது பற்றி எமக்கு உடன் அறியத் தரும்படி பொதுமக்களை வேண்டுகிறோம்.'' — இவ்வாறு மேலும் தெரிவித்தார் பிரிகேடியர் மெண்டிஸ். (உ)


### சமையற்காரர் தேவை

தேநீர்க் கடை ஒன்றுக்கு ரொட்டி போடத் தெரிந்த சமையற்காரர் தேவை. சம்பளம் நேரில்.

தொடர்பு:-

மணியம் தேநீர்க்கடை,
கல்வியங்காடு.

(57380)


## தமது...

(முதலாம் பக்கத்தொடர்)

தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வலது குறைந்த லோஜினி, லிங்காதேவி ஆகியோர் தவறான நடத்தைக்கு வழி நடத்தப்பட்டதை அறிந்து தந்தையான விஜயகுமார் கவலையடைந்திருந்தார் என்றும்—

சம்பவதினம் வீட்டில் மனைவியும், மகனும் இல்லாத நேரம் மூன்று பெண் பிள்ளைகளையும் கொலை செய்து தானும் தற்கொலை செய்ய முயன்றார் என்றும்— கூறப்பட்டது.

மூவரின் சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரியில் நடந்த மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (உ-3)

## மனித உரிமைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிருஷாந்தியும் அவரது குடும்பமும் கொலை செய்யப்பட்ட வழக்கில் முதலாவது எதிரி செம்மணிப் பகுதியில் நானூறுக்கும் மேற்பட்ட கைதானோர் கொலை செய்யப்பட்டு குழியில் புதைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். இந்தத் தகவல் எமது சங்க உறுப்பினர்களை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

இந்தத் தகவல் தொடர்பாக தேசிய மனிதவுரிமைக் குழு எடுக்கவுள்ள நடவடிக்கை தொடர்பாக இன்று பேசவுள்ளோம். அத்துடன் இது தொடர்பாக அந்தக் குழுவுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளோம் — என்றுள்ளது. (உ-3)

# இலங்கை விவகாரத்தில் பிரிட்டனுக்கு தெளிவான கொள்கை அவசியம்

## லியம் பொக்ஸ் கருத்து

லண்டன், ஜூலை 6

இலங்கை இனப்பிரச்சினையில் அரசியல் தீர்வுகாண பிரிட்டன் தெளிவான கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்கவேண்டும்.

பிரிட்டனின் முன்னாள் வெளிவிவகார இணை அமைச்சரும், எம்.பி.யுமான லியம் பொக்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கொள்கையானது பிரிட்டனின் தொழிற் கட்சி மற்றும் கன்சர்வேட்டிவ் அரசுகளினால் இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவு காணும் விதத்தில் ஏற்புடைய ஒன்றாக அமைய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழுவின் தலைவர் என். விஜயசிங்கம் வியாழக்கிழமை லண்டனில் வைத்து லியம் பொக்ஸை சந்தித்த போது பொக்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

கடந்த வருடம் லியம் பொக்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அரசியல் தீர்வு காண ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டாக யோசனைகளை முன்வைக்கும் விதத்தில் ஓர் இணைப்பை உருவாக்க வழிசமைத்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தற்போதுள்ள பிரிட்டிஷ் அரசை உதவக் கோரும் தமது முயற்சி தொடரும் என்றும், விரைவில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாகவும் லியம் பொக்ஸ் விஜயசிங்கத்திடம் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஆயுதங்கள் மீட்பு!

கொழும்பு, ஜூலை 6

வடமராட்சி நாகர்கோயில் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் பெருமளவு ஆயுதங்களை மீட்டுள்ளனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்களில் 30 சன்னிவெடிகளும் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

லங்கள் புதைக்கப்பட்டுள்ளனவா? இல்லையா? என்பது குறித்து அறிய உடன் ஏற்பாடு செய்து கவலையுடன் உள்ள உறவினர்களுக்கு உதவுவீர்கள் என நம்புகின்றோம்.

காணாமற் போனவர்கள் தொடர்பாக 512 படைப் பிரிவு அலுவலகத்தில் விசாரணை நடைபெறவிருப்பதாக அறிகிறோம். மனநிலை பாதிக்கப்பட்டுள்ளவர்களை மீண்டும் மீண்டும் விசாரணைக்கு அழைப்பதன் மூலம் அவர்கள் மேலும் மனநிலைப் பாதிப்பையே அடைவர் — என்றார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக மேஜர் ஜெனரல் பலகல்ல தமக்கு உறுதியளித்ததாகவும் ஜெகன் கூறினார். (உ-3)

## வவுனியா பாடசாலையில் வீதி மறிப்புப் போர்!

வவுனியா, ஜூலை 6

வவுனியா கோமரசங்குளம் மகா வித்தியாலய ஆசிரியர் ஒருவரை இடமாற்றம் செய்ததைக் கண்டித்து அப் பகுதி மக்கள் வீதி மறிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

அப்பாடசாலையின் ஆசிரியரை இடமாற்றம் செய்ததையும் —

அப்பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்த டிராக்டரை வேறு பாடசாலைக்கு வழங்கியதையும் —

கண்டித்தே வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன் இவ்விடயத்தில் தலையிட்டு ஆசிரியரின் இடமாற்றத்தை ரத்துச் செய்ததுடன் டிராக்டரையும் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்தார் எனவும் —

இதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது எனவும்— தெரிவிக்கப்பட்டது. (உ-164-3)

## பூரான் கடித்தது

யாழ்ப்பாணம் ஜூலை 6

இரவு படுக்கையில் இருக்கையிலேயே ஒருவருக்கு தலை உச்சியில் வெள்ளைப் பூரான் தீண்டியது.

அல்வாய் தெற்கில் நேற்று முன்தினம் அதிகாலை 3 30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கதிரவேல் ஜெயராணி (வயது 43) என்பவரே வெள்ளைப் பூரானால் தீண்டப்பட்டவர்.

மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார், (உ-15)

## கைலாசபதி அரங்கில் நாட்டு கூத்து

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் வளர்ச்சி நிதிக்காக, வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினர் அளிக்கும் ''ஆரணியத்தில் அடல் செறி வீமனும் விஜயனும்'' எனும் நாட்டுக் கூத்து மேடையேற்றப்பட உள்ளது.

பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நாளை செவ்வாய்க்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு இக்கலை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பாரம்பரிய கலை மேம்பாட்டுக் கழகம் அண்மையில் நடத்திய நாட்டுக் கூத்துப் போட்டியில் முதலிடம் பெற்ற இந்த நாட்டுக் கூத்து புதிய உயர் கல்லூரியின் ஆதரவில் மேடையேறுகிறது. (அ)

## சமய அறிவுப் போட்டி

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் ஆண்டு 3 முதல் 8வரையான மாணவர்களுக்கான சைவசமய அறிவுப்போட்டி எதிர் வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையில் நடைபெறும். (ஐ-30)

## மந்திகையில் மருந்து தட்டுப்பாடு

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் தொற்று நோய் எதிர்ப்பு மருந்து வகைகள், பனடோல் உள்ளிட்ட முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ஐ-173)


மக்கள் மனதில் தமக்கென ஒரு நீங்காத இடம் பிடித்த

## வீடியோ கலாமினி

தமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன்

சிங்கப்பூரிலிருந்து 98 ஆம் ஆண்டு மொடல் புதிய ரக மிக்சர்கள், புத்தம்புதிய கமெராக்கள், SD 570, SD 225 வீடியோ டெக்குகள் வரவழைத்து காதலன், ஜீன்ஸ், இந்தியன் திரைப்படப் பாடல் காட்சிகளில் வரும் கொம்பியூட்டர் டிஜிட்டல் மிக்சிங் முறையில் திறம்பட நடத்தி வருகின்றார்கள். பூப்புனித நீராட்டு விழாவிற்கென்றே விசேடமாக அமைக்கப்பட்ட சுழல் தாமரை, சுழல் ராட்டினம், மாடிப்படி செற், பலவர்ணக் குடைகள், சுழல் நட்சத்திரம், பிறை, அன்ன ஊஞ்சல், கடற்கரைகளில் அமைக்கும் ரூறிஸ்ற் பெரிய குடைகள் போன்ற பிரமாண்டமான செற் அமைத்து படப்பிடிப்புக்கு அழகு மிளிரச்செய்து வருகின்றார்கள்.

அத்துடன் தண்ணீர் தொட்டி வசதி இல்லாதோர்களுக்கெனச் சுவிஸிலிருந்து பிளாஸ்ரிக் தண்ணீர்த் தொட்டி வரவழைக்கப்பட்டுள்ளது. காட்சிகளுக்கேற்ப பலவர்ண ஆடைகள் மாற்றிப் படம் பிடிப்பதற்கென்றே எமது ஸ்தாபனத்தில் பூங்கா வசதியும் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் சொள்ளுகின்றோம்.

01-08-98 இல் புதிதாக அமைக்கும் இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் அமைந்த 3 மின் விசிறிகள், பலவர்ண கலர் மின்குமிழ்கள், 100 பிளாஸ்ரிக் கதிரைகள், 20 சிறுவர்களுக்கான சிறிய பிளாஸ்ரிக் கதிரைகள் ஆகியவற்றுடன் அமைந்த ''M'' வடிவிலான அழகிய சொக்கட்டான் பணப்பந்தல் வாடகைக்கு விடவிருக்கின்றார்கள்.

★ ஓடர்களுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

என்றும் உங்கள் நினைவில்...

### வீடியோ கலாமினி

அச்சுவேலி.

யாழ். நகரில் தொடர்புகளுக்கு:-

கல்யாணி

பஸ்நிலையம் முன்பாக,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (57359)



நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில்

இப்சனின்

### ஒரு பாவையின் வீடு (நாடகம்)

இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்

காலம்: 07-07-1998 செவ்வாய்க்கிழமை

● காட்சி ஒன்று: முற்பகல் 9-30 மணி (புதிய நேரம்)
பாடசாலை மாணவருக்கு மட்டும் 20/-

● காட்சி இரண்டு: பிற்பகல் 2-30 மணி (புதிய நேரம்)
ஏனையோருக்கு 25/- 50/- 100/-

நுழைவுச் சீட்டுகளை மண்டப வாயிலிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்ரறக்ட் கழகம் - தமிழ் மன்றம்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

(சி/4189)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org